விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பதினான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை (17.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303




## ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மனிதச் சங்கிலிப் போராட்டம்



### கலைஞர் கருணாநிதி அழைப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர்வரும் 21 ஆம் திகதி சென்னையில் பிரமாண்ட மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கைக்கு ஆயுத உதவியை நிறுத்த வேண்டும். இதை இரண்டு வாரங்களில் செய்யா (14 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுக்கோ மருந்து வகைகளுக்கோ வன்னியில் எவ்வித தட்டுப்பாடுமில்லை

### அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்தில் அத்தியாவசியப் உணவுப் பொருள்களுக்கோ மருந்து வகைகளுக்கோ எவ்வித தட்டுப்பாடும் இல்லை என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மாலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது, இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவு விநியோகத்தை அரசுக்கு எதிரான சக்திகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த (14 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலையில் ஐந்து மணி நேரம் படையினர்-புலிகள் கடும் மோதல்

## சேத விபரம் குறித்து மாறுபட்ட தகவல்

(யாழ்ப்பாணம்)

**முகமாலையில் நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னகர்வினையடுத்து அங்கு பெரும் போர் வெடித்தது. காலை 6.30 மணி தொடக்கம் நண்பகல் 11.30 மணிவரை இம் மோதல் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இம் மோதலில் 15 இராணுவத்தினர் பலியானதாக விடுதலைப்புலிகளும் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் இருவர் பலியானதாக இராணுவமும் கூறியுள்ளது.** (14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைவரம் தொடர்பில் இந்திய அரசு மீண்டும் கவலை

(புதுடில்லி)

இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் மோதல்களின் காரணமாகப் பொதுமக்கள் மீது ஏற்படும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து இந்தியா மீண்டும் கவலை தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பொதுமக்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

மேலும் அத்தியாவசியப் பொருள்கள் அவர்களைச் சென்றடைய அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் பிரணாப் முகர்ஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தீர்வு பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் ரீதியிலான (14 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே... தரிசனம்

### திருநெல்வேலியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அம்மன் வீதியில் நேற்று மதியம் 12 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கட்டப்பிராயைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான சந்தியாம்பிள்ளை ரனிஸ்லெஸ் அமலதாஸ் (வயது-42) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் (14 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் தற்காலிகமானதாம்!

### அரசாங்கம் கூறுகின்றது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தம் ஒரு தற்காலிகமானது எனத் தெரிவித்திருக்கும் அரசாங்கம், தமிழ் மக்களுக்கு எதிராக எந்தவிதமான தாக்குதல்களையும் முன்னெடுக்கவில்லை எனக் கூறியுள்ளது.

இலங்கை இனப் பிரச்சினையை மோதல்கள் மூலம் தீர்க்க முடியாது எனவும் அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் எனவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

அத்துடன் இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே இலங்கை வெளிவிவகார அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தற்பொழுது காணப்படும் நிலைமை ஒரு தற்காலிகமானது. விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கப் படைகள் வெற்றி பெற்று வருகின்றன. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. பயங்கரவாதிகளுக்கே எதிரானது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்திற்கு இடமில்லை ஜனாதிபதி ராஜபக்ஷ அறிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. புலிகளுக்கு எதிரான இராணுவ தாக்குதல் தொடரும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, புலிகளுடன் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இனி இடம் இல்லை. புலிகளை முழுமையாக ஒழிக்கும் வரை அவர்கள் மீதான இராணுவ தாக்குதல் தொடரும்.

புலிகளின் தற்கொலைப் படையினர் இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களை கொலை செய்யும் சூழ்நிலையில் போர் நிறுத்தம் செய்வது பலன் தராது.

போர் நிறுத்த நடவடிக்கையை தலைவர்கள் மீது தற்கொலைப் படை தாக்குதல் நடத்துவதற்காக புலிகள் பயன்படுத்திக் கொள்வர். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ச-5)

## ஏ-9 வீதியில் கடும் மோதல்

### வன்னி சென்ற 50 உணவு லொறிகள் வவுனியாவுக்குத் திரும்பிச் சென்றன

(கொழும்பு)

ஏ-9 வீதிப் பகுதியில் இடம்பெற்ற கடும் மோதல்களையடுத்து நேற்று வன்னிக்குச் சென்ற ஐ.நாவின் உணவுப் பொருள்கள் அடங்கிய 50 லொறிகளும் மீண்டும் வவுனியாவுக்குத் திரும்பியுள்ளதாகக் கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகம் தெரிவித்தது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் 2-வது உணவுப் பொருள்கள் அடங்கிய வாகனத் தொடர் அணி நேற்றுப் பகல் வவுனியாவிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றது.

புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் பாதையூடாகச் சென்று விடுதலைப்புலிகளின் கட்டுப் (14 ஆம் பக்கம் பார்க்க)






யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்தின் மகளிர் சிறுவர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் சேவையில் 25 ஆண்டுகள் பூர்த்தி செய்தோரை கௌரவிக்கும் நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து அழைத்துச் செல்லப்படுவதையும், மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

# யாழ்.பிரதேச செயலக சிறுவர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சிறுவர் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு, கியூடெக்-கரித்தாஸ் நிறுவன இயக்குநர் சி.ஜீ.ஜெயக்குமார் அடிகளார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக எப்.ஆர்.சி இணைப்பாளர் எஸ்.சிதம்பரநாதன், ஜசாக் இணைப்பாளர் எஸ்.சுகிர்தராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி நித்தியா குணராஜா எழுதிய 'தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் சூ.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமாரனும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுக உரையை வலிகாமம் கல்வி வலய தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் மணிமாறனும் ஆய்வுரையை வட்டு. இந்துக்கல்லூரி ஆசிரியரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவளவாளருமான செல்வி எம்.ஞானசோதியும் ஆற்றவுள்ளனர். (ஓ)

# விண்ணப்பம் கோரல்

### கணக்காய்வுப் பரீட்சகர்

கணக்காய்வுப் பரீட்சகர் சேவையில் கணக்காய்வு பரீட்சகர் தரம் IIக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்போட்டிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரி பல்கலைக்கழக பட்டதாரியாகவோ அல்லது உயர் தேசிய கணக்கியல் அல்லது வணிக டிப்ளோமாதாரியாகவோ இருக்க வேண்டும்.

விண்ணப்பத்தினை 2008.11.07 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை,பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

### ஹன்சாட் அறிக்கையாளர்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் தொகுதியில் நிலவும் ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) பதவிக்கு சிறந்த உடல் நலமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பத்தை 2008.11.10 ஆம் திகதிக்கு முன்னதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், சிறி ஜெயவர்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

ஹான்சாட் அறிக்கையாளர் சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றுடன் தமிழ் மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் ஆங்கில, சிங்கள மொழியறிவும் கணனி அறிவும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

இவ்விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை இன்று முதல் வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடமுடியும். (ச)

# கூடைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான கூடைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் றோட்டறக்ட் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் இம்மாதம் 14ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்ற இப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர்மடம் எதிர் உடுவில் மகளிர் கல்லூரியும், பிற்பகல் 4 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி எதிர் புனித பரியோவான் கல்லூரியும் மோதவுள்ளன. (ஓ)

# விண்ணப்பம் கோரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழிலாளி தரம்III பதவிக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை என யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 14ஆம் திகதி வலம்புரியில் வெளிவந்த யாழ்.பல்கலைக்கழக தொழிலாளி தரம் III பதவிக்கு உயர் கல்வி அமைச்சினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது என்ற செய்திக்கே யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் மறுப்புத் தெரிவித்தன. (ச)

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களும் இப்பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு, கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ஓ)

# பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசல உடையார் மண்டபத்தில் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்து கொள்ளவுள்ளார்.

அருணோதயம் மலர் வெளியீடு காலை 10 மணிக்கு அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

# இலவச உலர் உணவு நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

11.08.2006க்கு முன்னர் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 2008 ஒக்டோபர் மாதத்துக்கான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2008 ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரண விநியோக முன்னேற்ற அறிக்கையினை தனித்தனியாக சமர்ப்பித்து மேற்படி விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் இன்று பெற்று பொருட்களை களஞ்சியங்களில் இருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

ஒக்டோபர் 2008 மாதத்துக்கான விநியோக நடவடிக்கைகளை விநியோக அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தரமான பொருட்கள் சரியான பயனாளிகளுக்கு சென்றடைவதனையும் உரிய காலத்தில் நிவாரணவிநியோகம் ஆரம்பிக்கப்படுவதனையும் தாங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர்களை அரச அதிபர் கேட்டுள்ளார். (ச)

# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் முகமாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சுடன் இணைந்து இணை அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் வடமாகாணத்தில் தற்போது சாதாரண தர அதிகாரிகளுக்கான 81 வெற்றிடங்களும் விசேட தர அதிகாரிகளுக்கான 81 வெற்றிடங்களும் காணப்படுவதாகவும் எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுவதற்கான தமிழ்மொழி பேசுகின்ற இலங்கை கல்விச் சேவை அதிகாரிகளின் சாதாரண மற்றும் விசேட தர அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை 80 வீதம் நிரப்புவதற்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உரிய விடயம் தொடர்பில் விசேடமாக பணியாற்றியுள்ள அதிகாரிகளில் (ஏடீஈ) 20 வீதமான வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கை கல்வி நிர்வாக விசேட IIIம் தரத்திற்கு இணைத்துக் கொள்வதற்கும் விசேட தகைமைகளின் பிரகாரம் பதவியுயர்வு ஒழுங்கு விதிகளுக்கமைய சாதாரண கடமைகளில் ஈடுபட்டுவரும் பாடசாலை அதிபர்களை இலங்கை கல்வி நிர்வாக சாதாரண IIIம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக தமிழ்மொழி பேசுகின்ற அதிகாரிகளை இணைத்துக் கொள்கின்ற வேகம் போதுமானதாக இல்லை.

பொதுவாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வருடம்தோறும் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுவதாகவும் ஆனால் வடமாகாணத்திற்கென 10 வீதம் மாத்திரம் போட்டிப் பரீட்சையின் மூலம் கட்டம் கட்டமாக இணைத்துக் கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக ஓய்வு பெற்றுச் செல்லல்,பணியை கைவிட்டுச் செல்லல் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கும் பணியில் இணைத்துக் கொள்ளும் எண்ணிக்கைக்கும்இடையில் பாரிய இடைவெளிகாணப்படுவதாகவும் கிழக்கு மாகாணத்திலும்இவ்வாறான நிலையே தொடர்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர்,

எனவே புதிய வகையிலானமுறைமை ஒன்றை அறிமுகம் செய்யாமல் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையைதொடர்ந்து மேற்கொண்டால் வடமாகாணத்தில் நிலவும் கல்வி அதிகாரிகளுக்கான வெற்றிடங்களைநிரப்பஇயலாமல்போய்விடும் என்றும்கூறியுள்ளார். (ச)

## தெல்லிப்பழை பிரதேச செயலகம்

வலிகாமம் வடக்குக் கலாசாரப் பேரவை நடத்தும் யாழ்ப்பாண கிராமிய பண்பாட்டு இலக்கியம் சார்ந்த

**மாபெரும் புகைப்படக் கண்காட்சி**

**யாழ்ப்பாணப் பெட்டகம்–1**

காலம்:– 15, 16, 17, 18 ஒக்டோபர் 2008

இடம்:– தெல்லிப்பழை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபம்.

தினமும் காலை 9 – மாலை 4 மணிவரை

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிரதேச செயலகமும்
கலசாரப் பேரவையும்
வலிகாமம் வடக்கு.

(இ–102)

# இன்று ஒரு தகவல்

## கொட்டாவி

நீங்கள் சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும்! என்று சொல்வதுண்டு. அதே மாதிரி இன்னொன்றும் சொல்லாம்.

''நீங்கள் கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட்டாவி விடும்!'' என்று. ஆமாம்! இது உண்மை தான்!

இது ஒரு தொற்று வியாதி மாதிரி...

ஒருவர் வாயைத் திறப்பதைப் பார்த்தால் நமக்கும் ஒருஉந்துதல் வந்து கொட்டாவி விடுகிறோம்.

''இந்தக் கொட்டாவியைப் பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடுகிறது'' என்கிறார் Dr.provine என்ற ஆராய்ச்சியாளர்.

ஒரு கூட்டத்தில் பலரிடம் கொட்டாவி சம்பந்தமான விஷயத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கிறார்.

அப்படி படிக்கும் போதே 75 சதவீதமானோர் கொட்டாவி விட்டார்களாம். மற்ற விஷயத்தைப் படிக்கும் போது 20 சத வீதமானோர் தான் கொட்டாவி விட்டார்களாம்!

இந்த தகவலை கேட்கும் போது எத்தனை பேர் கொட்டாவி விடுகிறார்களோ? யாருக்கும் தெரியும்?

கொட்டாவியைப் பற்றி பொதுவாக அனைவரும் நம்பிக் கொண்டிருப்பது என்ன தெரியுமா? இரத்தத்தில் இருக்கும் ஒட்சினை அதிகரிப்பதற்கோ அல்லது இரத்தத்திலிருந்து மேலதிக காபனீரொட்சைட்டை வெளியேற்றவோ உண்டான சுவாசப் பயிற்சி தான் கொட்டாவி என்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

ஆனால் Dr.provine உம் இன்னொருவரும் இதைப் பற்றிசெய்த ஆராய்ச்சியில் இந்தக் கருத்தை அவ்வளவு பொருத்தமானமாக இல்லை என்கிறார்கள்.

ஏனெனில் ,சுத்தமான ஒட்சிசனை சில பேர் சுவாசிக்கிற மாதிரி செய்து பார்த்ததில் அவர்களெல்லாம் அதிகமாக கொட்டாவி விடுகிறார்களாம்.

அப்படியானால் ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட்டாவி விடுகிறார்கள்என்று நினைப்பது தவறு தானே!

மனிதன் பிறந்து 5 நிமிஷத்திலிருந்து இதை ஆரம்பித்து விடுகிறான்.

அது மட்டுமல்ல மிருகம் -பறவை -மீன்களெல்லாம் கூட கொட்டாவி விடுகிறது.

மனிதன் தூண்டுதல் உணர்வு (stimulation) குறைவாக இருக்கும் போது கொட்டாவி விடுகிறான்.

முக்கியமான ஒன்று நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் மிருகங்கள் கொட்டாவி விடுகிறது!

மிருகங்களை பொறுத்தவரை , கொட்டாவி விடும்போது இதயத் துடிப்பு , இரத்த அழுத்தம் என்பன அதிகமாவதால் இது அந்த மிருகத்தை செயல்பட தயார் நிலைக்கு கொண்டு வருகிறது!

மனிதன் -சாவகாசமான நிலையில் கொட்டாவி விடுகிறான்.

சிங்கம் -சாப்பாட்டு நேரம் நெருங்கும் போது கொட்டாவி விடும்.

slamese fighting fish -கூட்டமாக இருக்கும் போது கொட்டாவி விடும். முழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் ஒரு உந்துதலை கொடுப்பதற்காக உடம்பு செய்யும் உதவி கொட்டாவி!

சில பிள்ளைகளுக்கு பரீட்சை எழுத உட்கார்ந்தால் முதலில் கொட்டாவி தான் வருகிறது. அதன்பின்னர் தான் Answer வருகிறது.

கொட்டாவியைப் பற்றி இது தான் உண்மை என்று உடல் ரீதியான விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியவில்லை! ஏனெனில் அது எந்த நேரத்தில் வரும் என்று உறுதியாக சொல்ல முடியவில்லை.

அடிக்கடி கொட்டாவி வருகிறது என்று ஒருவர் டாக்டரிடம் போனார் .

டாக்டரும் சோதித்து விட்டு வாயைத் திறக்கச் சொல்லி மருந்தை வாயில் போட்டு மூடிக் கொள்ளுங்கள் என்றார் அதற்குள் டாக்டர் வெளியே போய் விட்டு வந்தார்.

மருந்தை விழுங்க வாயைத் திறந்தவர் மூடவேயில்லை!

"ஏன் சேர்... பெரிய கொட்டாவியாக வருகிறதா?" என்று கேட்டார் டாக்டர். "அதற்கு இவர் கொட்டாவி எப்போ முதோ போய் விட்டது... இப்ப நான் வாயைத் திறந்தது உங்கள் கையிலுள்ள பில்லைப் பார்த்து விட்டு !" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை விவகாரம் தொடர்பாக மத்திய சிறைக்கைதிகள் உண்ணாவிரதம்

(சேலம்)

இலங்கையில் தமிழ் மக்கள் நோக்கும் நெருக்கடிகள் மற்றும் படுகொலைகளைக் கண்டித்து சேலம் மத்திய சிறையில் 812 கைதிகள் திடீர் உண்ணா விரதம் மேற்கொண்டனர்.

சிறைக்கு வெளியே நக்ஸலைட் அமைப்பினர் விடுத்த கோரிக்கையையடுத்து இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தர்மபுரியைச் சேர்ந்த நக்ஸலைட் அமைப்பினர் சேலத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் சுவரொட்டி ஒட்டியிருந்தனர். அதில், ஈழத் தமிழர்கள் மீதான இனவெறி தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும், இந்திய அரசு அளித்து வரும் இராணுவ பயிற்சி, ராடர் பயிற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சேலம் மத்திய சிறையில் உண்ணாவிரதம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன் தினம் அதிகாலை 4 மணிக்கு சிறை அறைகள் திறக்கப்பட்டன. கைதிகள் குளித்து முடித்தனர். 6 மணிக்கு சிற்றுண்டி தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் 7 மணிவரை கைதி கள் சாப்பிட வரவில்லை சில மணி நேரம் கழித்து சில கைதிகள் மட் டும் வந்து சாப்பிட்டு சென்றனர். இதைய டுத்து சந்தேகம் அடைந்த சிறை காவலர்கள், சிறை அறைக ளுக்குச் சென்று கைதிகளை சாப்பிட அழைத்தனர். ஆனால்யாரும் சாப்பிட வர வில் லை.

இலங்கையில் தமிழினப் படுகொலையை கண்டித்து உண்ணா விரதம் இருப்பதாகவும், மத்திய அரசு தலையிட்டு தமிழர்கள் மீதான தாக்குதல்களை தடுத்த நிறுத்த வேண்டும் என்றும் கோரினர்.

சேலம் சிறையில் 1189 விசாரணை மற்றும் தண்டனை கைதி கள் உள்ளனர். இதில் 812 பேர் உண்ணாவிரதம் இருந்தனர். தகவ லறிந்து விரைந்து வந்த சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளர் ஆனந்தம் உண்ணாவிரதத்தை கைவிடும்படி கைதிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் கைதிகள் மறுத்து , போராட்டத்தை தொடர்ந்தனர்.

சேலம் மத்திய சிறையில் சிறை நிர்வாகத்தை கண்டித்தும் கோஷ்டி மோதல் காரணங்களாலும் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பது வழக்கமான ஒன்று.

ஆனால், இந்த முறை சிறை க்கு வெளியில் நக்ஸலைட் அமைப்பினர் அறிவித்த உண்ணாவிரதத் துக்கு ஆதரவு தெரிவித்து கைதிகள் சிறைக்குள் உண்ணாவிரதம் மேற் கொ ண்டுள்ளனர். இது சிறை நிர்வா கத்தை அதிர்ச்சியடைய செய்துள்ளது. (ஓ)

# வலது குறைந்தோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்ட மூலம் விரைவில்

## சமூக சேவைகள் பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி

வலது குறைந்தோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட மூலத் தை இந்த ஆண்டு இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள் ளதாக சமூகசேவைகள்பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவிக்கி ன்றார்.

நேற்றுமுன்தினம் அனுஷ்டிக் கப்பட்ட சர்வதேச வெள்ளைப் பிரம் புதினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே பிரதி அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார். வருட இறுதியில் விழிப்புணர்வு அற்றோர் தொட ர்பில் மதிப் பீட்டு ஆய் வொன்றை நடத் த நட வடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

உலகெங்கும் வாழும் இலட்சக் கணக்கான விழிப் புலனற்றோக்கு உதவும் நோக்குடனும் மக்களின் கவனத்தை அவர்களுக்கு ஈர்த்து சமூக அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் பொருட்டும் வருடா ந்தம் ஒக்டோபர் 15ஆம் திகதி சர்வ தேச வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக் கப்படுகின்றது.

1969ஆம்ஆண்டு சர்வதேச விழிப்புலனற்றோர்சம்மேம் கொழும்பில் நடத்திய சர்வதேச மாநாட்டில் இந்த தீர்மானம் எடுக்க ப்பட்டது.

1931ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் வெள்ளைப் பிரம்பு கண்பார்வை அற்றவர்களின் அடையாளச் சின்னம் என பிரகடனப்படுத்தப்பட்டதுடன் சட்ட அங்கீரகாரமும் வழங்கப்பட்டது.

இதே வேளைசர்வதேச வெள்ளைப் பிரம்புதினத்தை அனுஷ்டிப்பதற்காக விரிவான ஏற்பாடுகள் இலங்கையின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு வெள்ளைப்பிரம்பை தாங்கியவர்களின் ஊர்வலங்கள், கண்காட்சிகள் மற்றும் பிரசாரக் கூட்ட ங்களும் ஏற்பாடு செய்யப் ட்டுள்ளதாக தெரிவிக் கப் படுகிறது. (ஓ)

# இராசி பலன்

17.10.2008
(ஐப்பசி 01,வெள்ளிக்கிழமை)
திருதியை முன்னிரவு 8.21
கார்த்திகைபின்னிரவு 2.41மணிவரை
இராகுகாலம் 10.32-12.02மணிவரை
சுபநேரம்6.02 -7.32மணிவரை
கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரவ மான நிலை,நல்லமுயற்சி, இடை யூறு. |
| இடபம் | சோம்பல் நிலை , தன விரயம், சுபசெலவு , காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை,தெய்வ தரிசனம்,சுபகாரியம்,நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | பெ ரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி,நன் கொடை, தேக நலன். |
| சிங்கம் | அதிக செலவு,சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு,நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக்கோளாறு,பொருள் விரயம்,காரியதாமதம்,கலகம். |
| துலாம் | மனோ தைரியம்,அபூர்வ சந்திப்பு, நல்ல தகவல்,தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி,செய் தொழில் விருத்தி,பகைவர் நேசம்,காரிய அனுகூலம். |
| தனுசு | பணக்குறைவு,அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக் குறைவு. |
| மகரம் | மனச் சஞ்சலம் ,தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி,தேகநலன், அதிகபிரயாசை,காரியஅனுகூலம். |
| மீனம் | சோம்பல் நிலை,சுப காரியச் செலவு,கௌரவக்குறைவு. |


வளவன்

# அவுஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக பிரவேசிக்கும் இலங்கையர் எண்ணிக்கை உயர்வு

சட்ட விரோதமானமுறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் இலங்கையர்களின் எண்ணிக்கைஉயர் வடைந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். சட்ட விரோதமான முறையில் அவுஸ் திரேலி யா விற்கு குடியேறுபவர்கள் தொடர்பில் விரிவான தடுப்பு நடவடிக்கைகள் தொடரப்பட உள்ளதாக குறிப்பப் படு கிறது.

கடல் மற்றும் வான் வழியாக அவுஸ்திரேலியாவிற்கு இலங்கையர்கள்கடத்தப்படுவதாகஅவுஸ்திரே லிய பொலிஸார் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தோனேசியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கையும் உயர் வடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஓ)



யாழ் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற வாணி விழா வின் போது சிறப்பு நிகழ்வாக யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ் முது மாணிக் கற்கை நெறி மாணவர்கள் வழங்கிய பட்டிமன்றம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் நடுவராகச் செயற்பட்ட தமிழ்த்துறை விரிவுரையா ளர் ஈ.குமரன் உரையாற்றுவதையும், நிகழ்வை ஆற்றுப்படுத்திய பேராசி ரியர் என்.சிவலிங்கராஜா அருகில்இருப்பதையும், வாதி க ளாகவும்,பிரதிவாதிகளாகவும் பங்கேற்ற ச.லலீசன், பா.பால கணேசன், ம.பா. மகாலிங்கசிவம்,கு.பாலசண்முகன்ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## நூலொன்றை அன்பளிப்பு செய்யுமாறு வேண்டுகோள்

நவீன காலத்திற்கு ஏற்ப நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகம் தரமுயர்த்தப்படவுள்ளது.

எனவே வாசகர்கள் ஒவ்வொருவரும் ஒரு நூலையாவது அன்ப ளிப்பு செய்து நூலகத்தின் தரத்தை உயர்த்த உதவுமாறு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலக நூலகர் கேட்டுள் ளார். (ஓ-36)

## ஸ்ரீ அம்மா பகவான் பூசையும் வாராந்த சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் கும்பாபிஷேக பூஜையும், வாராந்த சொற்பொழிவும் நாளை சனிக்கிழமை மாலை 3.30மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை தலைவர் மா.வேத நாதன் " ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீகம்" எனும் பொருளில் சிறப்புரையாற்றுவார். (இ)

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியிலுள்ள புதிய தலைமைக் காரியாலயக் கட்டடத்தில் இ.அரிகரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தி னர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்( அபிவிருத்தி) பொ.சிவலிங் கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் ( எண் பார்வை) எஸ்.கனகசபாபதி, யாழ்.செயலக புனர் வாழ்வுக்கிளை கணக் காளர் ச.குகதாஸ் ஆகியோர் கலந்துகொள் வார்கள். (இ)

## யாழ்.செய்திகள்

## பகவத்கீதை உபந்நியாசம்

(யாழ்ப்பாணம்)

"கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ் ணன் ஆத்மீக சபாவில் பிரதிவாரமும் இடம்பெறும் ஆத்மீக நிகழ்வில் இன்று பிற்பகல் 4.30 முதல் 6 மணிவரை இடம் பெறும்.

இந்நிகழ்வில் எஸ்.கே.என். தவராஜா ஜே.பி. ஆல் பகவத்கீதை உபந்நியாசம் இடம்பெறும்.

ஆத்மீக ஆர்வலர்களை கலந்து பயன் பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அழைக்கின்றது. (இ)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலை
ர.சதூஷா- 141 புள்ளிகள்,
க.நிந்துஜா -120 புள்ளிகள் (இ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 17

தனியாகவும் வேறு ஒருவருடன் கூட்டாகவும் ஆதனத்தை சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

# நூலக சேவை விஸ்தரிப்பு

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, நூலகத்தை தேடிய வாசகர் என்ற நிலையில் இருந்து வாசகரை தேடி நூலகம் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

தொலைவிலுள்ள மக்களுக்கு நடமாடும் நூலக சேவை வழங்குதல், சிறுவர் வட்டம் அமைத்து கலை நிகழ்வுகளை நடாத்துதல், பாடசாலைகள், மாற்றுவலுக் கொண்டோர், சிறுவர் நிலையங்களுக்கு சென்று விடுமுறை நாட்களில் நூலகத்தை பயன்படுத்தும் முறைகளை எடுத்துக்கூறி, வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், கொக்கவில் பொதுநூலகத்தில் விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்களில் சிறுவர்களுக்கான திரைப்படங் களை காட்சிப்படுத்தல் போன்ற செயற்பாடு களை மேற்கொள்ளவுள்ளது. இந் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கி நூலக அபிவிருத்திக்கு உதவுமாறு கொக்குவில் பொதுநூலகர் திருமதி எஸ்.பூபாலரத்தினம் கேட்டுள்ளார். (ஓ-36)

# அகில இலங்கை ரீதியில் ஆசிரியர் விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக் கென கல்வி அமைச்சு நடத்தவுள்ள விளை யாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள விரும் பும் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் ஆசிரியர்கள் பங்கு கொள்ளும் விளையாட்டுப் போட்டியை நடத் துவதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய் துள்ளது.

விளையாட்டுப் போட்டியில் பாடசாலை களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், ஆசிரி யர் கல்லூரிகள், பிரிவேனாக்கள் மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாட சாலை களில்ஆசிரியர்களாகக் கடமையாற் றுவோர் பங்குகொள்ளலாம் போட்டிகள் அகில இலங்கை மட்டத்தில் மட்டும் நடை பெறவுள்ளன.

போட்டிகள் 25-30 வயது, 30-35 வயது, 35-40 வய்து, 40-45 வயது, 45-50 வயது, 50-55 வயது, 55-60வயது என்ற பிரிவுவாரியாக நடைபெறவுள்ளது.

ஓட்டப்போட்டிகள் என்ற வகையில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர், 1500 மீற்றர் தூர ஓட்டங்களும் குழு நிகழ்வுகளாக கரப்பந்தாட்டம் -பெண்-ஆண் வலைப்பந்தாட்டம் பெண்களுக் குரிய போட்டியாகவும் மென்பந்து ஆண்களுக்குரிய திறந்த போட்டியாகவும் குழு நிகழ்வுகளில் வலய, மாகாண மட்டத்தில் இரண்டு குழுக்கள் கலந்துகொள்ள முடியும்.

வயதெல்லை டிசம்பர் 31ஆம் திகதியில் கணக்கிடப்பட வேண்டும். போட்டியாளர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிசெய்து கொள்ளவேண்டும். போட்டிகளுக்கான விண் ணப்பங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

போட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கு கடமை லீவும், புகையிரத ஆணைச் சீட்டும் வழங்கப்படவுள்ளது.

போட்டிகளில் பொருத்தமான அளவு ஆசிரியர்கள் கலந்துகொள்வதற்கு உற்சா கப்படுத்துமாறும் கல்வி அமைச்சின் உடற் கல்வி விளையாட்டு கல்விப் பணிப் பாளர் எல்.கே.ஜெயவீரா அறிவித்துள்ளார். (இ)

# யாழ்.மாநகரசபை விளையாட்டுக் கழக மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

யாழ். மாநகரசபை விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல உள்ளூ ராட்சித் திணைக்களங்களுக்குமிடையே 11பேர் பங்கேற்கும் 12 பந்துப் பரிமாற்றங் களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியினை சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடாத்து வதென தீர்மானித்துள்ளது.

மேற்படிசுற்றுப் போட்டியில் பங்கேற்க விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் விண் ணப்பப் படிவத்தினை யாழ்.மாநகரசபையில் பெற்றுஎதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழ மைக்கு முன் செயலாளர், யாழ். மாநகர சபை விளையாட்டுக் கழகம், மாநகர சபை அலுவலகம் என்று முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்

விண்ணப்பத்துடன் சுற்றுப் போட்டிக்கான பிரவேசக் கட்டணமாக ரூபா 300 க்கான காசோலை/காசுக்கட்டளையை 'யாழ். மாநகர சபை விளையாட்டுக்கழகம்' என்ற பெயரில் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

கட்டணங்கள் செலுத்தப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுமென்றும் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி க்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் வைத்து பரிசீலிக்கப்பட்டு குலுக்கல்மூலம் பட்டியல் படுத்தி போட்டித் திகதிகள் நிர்ணயம் செய்யப் படுமெனவும் அத்தருணம் மேற்படி சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பித்த விளையாட்டு க்கழகங்களின் பிரதிநிதிகள் சமுகமளிப்பது விரும்பத்தக்க தெனவும் யாழ். மாநகர சபை விளையாட்டுக் கழக செயலாளர் இ.இரத்தின சிங்கம் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 222-2335 என்ற இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (இ)

## முன்பள்ளி புனரமைப்பு

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவி யுடன் வலி கிழக்கு பிரதேச சபையால் புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா முன்பள்ளி புனர மைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த முன் பள்ளி 2006 ஆம் ஆண்டு மினிச் சூறாவளி யால் பெரும் சேதமடைந்தமை குறிப்பிடத் தக்கது. (ஓ-134)

## செம்மணி வயல்களில் நெற்செய்கை அதிகரிப்பு

செம்மணி வயல்களில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கோப்பாய் கமநல சேவை நிலையத்தினரால் மானியத் துக்கு வழங்கப்படும் உரவகைகள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இப் பகுதியில் கடந்த வருடங்களை விட இம் முறை நெற்செய்கையாளர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

நீண்டகாலமாக தரிசு நிலமாக இருந்த காணிகளும் நெற்செய்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. (ஓ-134)

## ஆலோசனைக் கூட்டம்

லண்டன் ஆவரங்கால் ஒன்றியத்தின ரால் ஆவரங்கால் கிராமம் பற்றிய வரலாற்று நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

ஆவரங்கால் கிராமத்தின் வரலாறு சேகரிக்கும் பணியில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப நிர்வாகத்தினர் ஈடுபட்டுள்ள னர்.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் வ.ஆறுமுகம் தலைமை யில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண் டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

## மக்கள் பங்களிப்புடன் வீதி திருத்தப்பட்டது

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருந்த புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக் னேஸ்வரா வீதி வலி கிழக்கு பிரதேச சபை யினரால் திருத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இப் பகுதியால் செல் லும் மக்களும், அப்பகுதி மக்களும் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இவ்வீதி திருத்துவதற்கு வலிகிழக்கு பிரதேச சபை 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கி யுள்ளது. வீதி திருத்த வேலைகளுக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி மக்களும் பங்களித்து வீதியைத் திருத்துவதற்கு உதவியமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-134)


## பொதுமக்களுக்கான சீமெந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள பொதுமக்களுக்கு சிறு சிறு அத்தியாவசிய தேவைகளுக்கான சீமெந்து விநியோகம் இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் யாழ். வணிகர் கழகத் தால் வழங்கப்படும்.

அதற்கான உண்மைத் தன்மை பற்றிய கடிதங்கள் கிராமசேவை உத்தியோகத் தரினதும் உதவி அரசாங்க அதிபரினதும் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆகக் கூடிய சீமெந்து விநியோகம் 10 பைக்கற்றுக் களாக இருக்கும்.

பொதுமக்களின் முக்கிய அவசிய தேவை கருதி இந்த ஏற்பாட்டை யாழ். வணிகர் கழகம் செய்துள்ளதாக யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (இ)







மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான அரசாங்கச் செயற்பாடுகள் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் அதிபர் பா.சிவராசா தலைமையில் அரங்க செயற்பாட்டுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.

# தரிசனம்

வலம்புரி

# தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கியிருந்தால் இனப்பிரச்சினையின் அடிப்படை இல்லாது போயிருக்கும்

## தமிழர் கருத்து

"தேசிய மொழி" என்ற உச்சாடனத்தை யாழ்ப்பாணஇளைஞர் காங்கிரசே முதன் முதலில்கொண்டு வந்தது. எனினும் 1956இல் அந்தப் பிரயோகம் கைவிடப்பட்டு "உத்தியோக மொழி "என்ற சொல்லாடல் முன் மொழியப்பட்டது. உத்தியோக மொழியில் தமிழுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமான இடம் எது? என்றால் அதற்கான பதில் வேதனைதருவதாகவே அமையும்.

1976இல் சிங்களமும்– தமிழும் தேசிய மொழி எனக்கூறப்பட்டன. ஆனால் தமிழ் மொழியைப் பொறுத்த வரை அது வெறும் வாய்ச் சம்பிரதாயமாக மட்டுமே இருந்துள்ளது.

சிங்களம் தமிழும் தேசிய மொழி எனக் கூறப்பட்டது போல உரிய அந்தஸ்து தமிழுக்கு வழங்கப்பட்டிருக்குமாயின் இனத்துவ வேறுபாட்டின் இடைவெளிகள் குறைக்கப்பட்டிருக்கும் என துணிந்து கூறலாம். ஆனால் வெறும் வாய் மொழி அறிவிப்புகள் மூலம் ஒரு இனத்தின் உரிமையை – உணர்வை மொழிப்பற்றுதியை முழுமைப் படுத்த முடியும் என்பது யாதார்த்தத்தில் நிறைவேறக்கூடிய தல்ல. இருந்தும் நிறைவேற முடியாத ஒன்றையே அன்றைய ஆட்சியாளர்கள் வாய்ச்சடங்குகள் மூலமாக நிறைவேற்றமுற்பட்டனர். அதுவே இனங்களுக்கிடையிலான விலகலை மேலும் துரிதப் படுத்தியது.

1976இல் தமிழ்மொழியும் தேசிய மொழி எனக் கூறப்பட்டாலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின் 1988களில் இருந்தே வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியை அரசஉத்தியோகபூர்வமொழியாக பயன்படுத்த முடியும் என்ற கருத்தி யல் அரங்கேறியது.



பண்டாரநாயக்க – செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத் திட்டபின் இரு தரப்பு தலைவர்களும் பிரதமர் அலுவலகத்தின் மேல்மாடியிலிருந்து கீழ்மாடிக்கு சென்று கொண்டிருந்த காட்சி.

சிறுபான்மை இனங்கள்தாம் சிறுபான்மையினர் என்ற நினைப்பை நினையாத வகையில் ஒவ்வொரு அரசும் சமத்துவ அதிகாரங்களை வழங்குமாக இருந்தால் இனத் துவ வேறுபாடுகள் ஒரு போதும் தலை தூக்கமாட்டாது. இதற்கு மேலாக சிறு பான்மை இனத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியிருக்கும் கட்டத்தில் அதனை உடனடியாக அமுல் படுத்துவது கூட இன ஒற்று மைக்கு வழி வகுக்கும். இருந்தும் இலங்கையில் இனத்துவம் சார்ந்த பிரச்சினைகள் உணரப்பட்ட போதி லும் அவற்றுக்கு பரிகாரம் காண் பதில் அவசரம் தேவை யில்லை என்ற நினைப்பு நிலை மையை மோசமாக் கியது எனலாம்.


இத்தகைய தொரு துரதிஷ்ட நிலையே இலங்கை எங்களு டையதென்று நினைக்கும்மான சீகத்தை குறைத்துக் கொண் டது. இலங்கை இலங் கை யர்களுக்குரியது. அந்த எண்ணக் கருவை சிறுபான்மை இனங்களிடையேயும் கட்டி எழுப்ப வேண்டும் என்ற சிந்தனைகளும் அதற்கான நடவடிக்கைகளும் அறவே இல்லாத நிலையில் பெரும்பான்மை, சிறு பான்மை, ஆளும்வர்க்கம் என்ற உணர்வுகள் வக்கி ரமடையலர்யின.

### காரணம் என்ன

1948இல்இலங்கை சுதந்திரம் அடைந்த போது தங்களுடைய ஆட்சியை மீண்டும் பெறுவதாகவே சிங்கள மக்கள் நினைத்தார்கள். சிறுபான்மை இன மக்கள் பற்றிய சிந்தனை அவர்களிடம் அறவே இருக்கவில்லை.

இதனை உறுதி செய்வதாக இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்பான அரசியல் வரலாறுகள் அமைகின்றன். 1947இல் சோல்பரி ஆணைக்குழு பரிந்துரை செய்ய 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கின்றது.

1948இல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட பெரும்பான்மையினர் இலங்கை என்றநாட்டை கட்டியெழுப்புவதற்கான கூறுகள் பற்றியே சிந்தித்திருக்க வேண்டும். அத்தகையதோர் சிந்தனை எழுகைபெற்றிருக்குமாயின் அதன் முதற்பணி பல்லின மக்களை ஒன்றிணைத்து இலங்கை எங்கள் நாடு, நாம் இலங்கையர்கள் என்ற தேச உணர்வை ஊட்டும் வழிமுறைகள் கண்டறியப்பட்டிருக்கும்.



பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

ஆனால் இவை எவற்றுக்குமே சந்தர்ப்பம் இருக்கவில்லை. சுதந்திரத்தின் பெறுகை தமது ஆட்சியை மீளப்பெறுவதான நினைப்பே சிங்கள மக்களிடம் கருத்தேற்றப்பட்டது. இதன் காரணமாகவே சுதந்திரம் அடைந்து எட்டு ஆண்டுகளில் 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் பிரதிநிதித்துவ ஆட்சி முறைபிரிட்டிஷ் ஆட்சி முறை சார்ந்தது. இங்கு இடதுசாரிகளுக்கு இடம் இல்லாமல் போயிற்று. சுருங்கக்கூறின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு இலங்கை அறிமுகப் படுத்தப்பட்டதிலிருந்து ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவது பற்றி எதுவுமே இல்லாமல் போக பிரச்சினை தொடங்கலாயிற்று, அதற்கான முடிவு இன்று வரை எட்டப்படவில்லை.

இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமைக்கான காரணங்களைப் பட்டியல் படுத்தி அல்லது பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை அடுக்கி இனப்பிரச்சினையை தீர்க்காத தவறிலிருந்து தப்பித்துக்கொள்வதிலேயே காலம் கடத்தப்படுகின்றது.

## ஐக்கிய இலங்கைவேண்டுமாயின் சிங்களவர் அல்லாதவருக்கு கொடுக்க இருக்கும் உரிமை என்ன?

ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வாக தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்கப்போகின்றோம் என்பதில் ஆட்சியாளர்களிடம் இருக்கக்கூடிய தெளிவின்மை தொடர்கிறது. முதலில் அது நீக்கப்ப டவேண்டும்.

ஏனெனில் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கையில் 3 இனம் – 3 தேசியம் உண்டு. சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம், முஸ்லிம் தேசியம். இது மறுக்க முடியாத ஒன்று. எனினும் இதனை ஒன்று சேர்ப்பதற்கு எவருமே இல்லை என்பது பெரும் குறைபாடே.

### என்ன செய்ய வேண்டும்

ஐக்கிய இலங்கையை பெரும்பான்மை இனம் மட்டும் தீர்மானித்துக் கொள்வதானது சாத்தியமற்றது. ஐக்கிய என்ற சொற்பதம் ஒரு நாட்டின் அரசியல் புவியியல் எல்லைக்குள் எவரையும் விலக்கி வைக்காத ஒன்று. எனவே ஐக்கிய இலங்கை என்பது சிறுபான்மை இனத்துடனும் சம்பந்தப்பட்டது. இந்த உண்மையை உள்ளார்ந்தமாக ஏற்றுக் கொள்ளும் அடிப்படையு டன் ஐக்கிய இலங்கை கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இதன் போது எந்த இனத்தின் அடையாளமும் புறக்கணிக்கப்படக் கூடாது நாங்கள் இலங் கையை ஐக்கிய இலங்கையாகவே பார்க்கின்றோம். ஆனால் அதனைத் தொடர்வதும், நீடிப்பதும் எது? என்ற கேள்வி எம்முன் பதில் இன்றி இருப்பதை மறந்து – மறுத்துவிட முடியாது.


ஐக்கிய இலங்கை என்பது தமிழ் வானொலியில் மட்டுமே கூறப்படுகிறது. சிங்கள வானொலியில் அவ்வாறு எதுவும் கூறப்படுவதில்லை. இங்கு ஐக்கியப்பட்ட இலங்கை வேண்டுமா? அல்லது ஒன்றுபட்ட இலங்கை வேண்டுமா? ஐக்கியப்பட்ட இலங்கை வேண்டும் என்றால் சிங்களவர்கள் அல்லாதவர்களுக்கு நீங்கள் என்ன கொடுக்க தயாராகவுள்ளீர்கள்.

இத்தகைய கேள்விக்கான விடை இன்று வரை மௌனமாகவே அமைகிறது.

இலங்கையின் சோகம் என்னவென்றால் இந்த நாட்டின் அரசியல் வாதிகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே இருக்கக்கூடிய ஒற்றுமைகளை வெளிக்காட்டாமல் வேற்றுமைகளை மட்டுமே தூக்கி துலாம் பரப்படுத்தினர். இதன் விளைவே இன்றைய இனத்துவ விரிசலின் முதிர்ச்சி நிலையாகும்.

அண்டை நாடான இந்தியாவில் தமிழனாக இருப்பான், கர்நாடகனாக இருப்பான் அதே நேரம் அவன் இந்தியனாகவும் இருப்பான்.

ஆனால் இலங்கையில் இந்த நிலை முற்று முழுதாக இல்லை எனலாம். எதுவாயினும் நான் தமிழனாகவும் இலங்கையனாகவும் இருக்க விரும்புகிறேன். இதில் எதனையும் நான் விட்டுக்கொடுக்க தயார் இல்லை உலகில் எங்கெங்கு தமிழர்கள் இருந்தாலும் நாம் மொழி அடிப்படையில் ஒன்று சேரலாம். ஆனால் இலங்கையன் என்ற அடையாளத்தை நான் இழக்க மாட்டேன்.



# தரிசனம்

வலம்புரி
Muslim Information Centre

# வடக்கு முஸ்லிம்கள் மீண்டும் குடியேறுவது சாத்தியமாகுமா?

## முகாமில் தொடரும் துன்பத்தை அரசு உணர்வதாக இல்லை

கடந்த 18 வருடங்களாக அகதி வாழ்க்கையில் முக்கியமான கால கட்டத்தில் வடக்கு முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் அகதிகளுக்கான மீள் குடியேற்றம் சம்பந்தமான அவர்களின் நிலைப்பாட்டை அவர்களின் எதிர்காலம் பற்றிய ஒரு ஆரோக்கியமான கால கட்டத்தில் தற்போது இம் மக்கள் மிகவும் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

அகதிகள் ஆகிய அவர்கள் மீள் குடியேற்றம் என்ற பதத்தினை மிகச் சரளமாக பயன்படுத்தி வருகின்றனர். அதன் கொள்கை ரீதியான தார்ப்பரியத்தை, தாக்கத்தை, எதிர்கால விளைவுகளை அவர்கள் கருத்தில் கொள்வதில்லை. அரசாங்கத்தின் கண்ணோட்டத்திலும் சர்வதேச ஸ்தாபனங்களின் கண்ணோட்டத்திலும் மீள் குடியேற்றம் என்பதற்கு மிகத் தெட்டத்தெளிவான வரைவிலக்கணம் ஒன்று காணப்படுகிறது.

அதாவது இனப்பிரச்சினையால் – அரசியல் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதுவாழ்வு அளிக்க நிறுவன ரீதியாக உதவுவதே மீள் குடியேற்றத் திட்டமாகும். இந்த அடிப்படையில் மீள் குடியேற்றம் என்பது பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களில் வாழ்க்கையை புனரமைக்க உதவுவதைக்குறிக்கும். இதற்காக கொடுக்கப்படும் பணரீதியான கொடுப்பனவுகளையும் , அதேபோல் ஏனைய அடிப்படை வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதையும் மீள் குடியேற்றம் என்ற பதம் குறிக்கின்றது. உண்மையில் இவ்வகையான ஓர் மீள் குடியேற்றத் திட்டம் மூலம் பாதிக்கப்பட்ட



மக்கள் இழந்த மிக அடிப்படையான மனித உரிமைகள் பலவற்றை அவர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுப்பதைக் குறிக்கும்.

இந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடத்தில் மீளக் குடியேற்றுவதென்பதில் பல ஆழமான உண்மைகள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் சொந்த இடங்களில் தான் அம் மக்களின் வாழ்விடங்கள் , விவசாயம் , வர்த்தகம் , கைத்தொழில் ஆகிய பொருளாதார நலன்கள் காணப்படுகின்றன. அரசின் கொள்கை ரீதியான மீள் குடியேற்றத் திட்டமும் அதனோடு தொடர்புடைய கொடுப்பனவுகளும் தமது சொந்த இடத்தில் ஏற்கனவே இருக்கின்ற வீட்டைத்திருத்தவும் பொருளாதார நவடிக்கைகளை மீள ஆரம்பிக்கவும் உதவி வழங்குவதைக் குறிக்கும்.

அது மட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்கள் சொந்த இடத்தில் மீள் குடியேற்றப்படும் போது அரசியல் உரிமை இயல்பாகவே அம்மக்களுக்கு கிடைக்கின்றது. அதுபோலவே அம்மக்களின் கல்வி , வரலாறு, கலாசாரங்களைப் பேணுதல் ஆகிய ஏனைய அடிப்படை மனித உரிமைகளை அவர்களின் சொந்த இடங்களில் ஸ்தாபிக்க முடியும்.

ஆனால் இவர்களின் தாயகம் திரும்பும் நிலையில் பிரதேசத்திற்கு பிரதேசம் பல்வேறு பிரச்சினைகள் தற்போது காணப்படுகின்றன.

எமது தாயகமான யாழ்ப்பா ணத்தில் நாங்கள் குடியேறுவதற்கு பூரண விருப்பத்துடன் இருக்கிறோம். எனது முகாமில் வாழ்கின்ற சுமார் நூற்றுப்பதினாறு குடும்பங்களும் மீளக் குடியேற தயாராக இருக்கின்றது. ஆனால் எங்களின் மீள் குடியேற்றத்திற்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது எங்களின் குடியிருப்புகள் அழிக்கப்பட்டநிலையில் காணப்படுகின்றன. குறிப்பாக புதிய சோனகத்தெரு முழுமையாக அழிந்து பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன.

முஸ்லிம் குடியிருப்புக்களில் நல்ல நிலையில் உள்ள வீடுகளில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் குடியிருக்கிறார்கள் .மேலும் தொடராகக் காணப்படுகின்ற வீடுகள் இடிந்து போயுள்ளன. இவற்றை அகற்றுவதில் உள்ள பிரச்சினை, காணிகளின் எல்லைப் பிரச்சினைகள் போன்றனவும் மீள் குடியேறுவதில் உள்ள பிரச்சி னையாகவுள்ளன.

மேலும் இராணுவம் எமதுவீடுகளில் முகாமிட் டிருத்தல் , மீண்டும் வெளியேற்றப்படலாம் என்ற அச்சப்பாடு, ஏ-9 வீதி மூடப் பட்டிருத்தல், விமானம் அல்லது கப்பல் மூலம் மட்டுமே பயணங்கள் இரும்பு வியாபாரத் தடைகள், முஸ்லிம்கள் வசமிருந்த வியாபார தளங்கள் இல்லாது போனமை போன்ற காரணங்களினால் எங்களின் மீள் குடியேற்றம் பாரிய சவால்களை எதிர்நோக்கி யுள்ளது. இருந்த போதிலும் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் கணிச மான தொகையினர் ஆர்வத்துடன் மீள் குடியமர்ந்தார்கள்.

ஆனால் அங்கு முன்னர் இருந்த சூழல் தற்போது இல்லாத நிலையிலும் எங்களின் மீள் குடியேற்றத்திற்கு பொருத்தமான திட்டங்களை நடைமுறைப் படுத்தாமை காரணமாகவும் தரை வழிப் பாதை தடைப்பட்டமை யாலும் மீள் குடியேற்றம் தடைப்பட்டது என யாழ்ப்பாணம் சோல்டன் முகாம் தலைவர் ஐ.நாபாயிஸ் தெரிவித்தார்.

ஒரு அமைதியான சமாதான சூழ்நிலையிலும் மீண்டும் விரட்டப்பட மாட்டோம் என்று விடுதலைப்புலிகளால் உறுதியளிக்கப்பட்டால் பெண்களில் முதல் முதலாக நாம் தான் மீளக்குடியேறுவேன் என புத்தளம் மகளிர் சங்கத் தலைவி ஜுவைரியா உவைஸ் தெரிவித்தார்.

அங்கு கூடியிருந்த பெண்கள் கருத்துத் தெரிவிக்கையில் நாங்கள் எங்கள் பிரதேசங்களில் மிகவும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தோம்.

புத்தளத்தில் குடியேறியதி லிருந்து கல்வி, கலாசாரம் , பொருளாதார, பாலியல் ரீதியான பிரச்சினைகள் என பல்வேறு பிரச்சினைகளை முகாம்க ளில் வாழ்கின்ற நாங்கள் எதிர்நோக் குகின்றோம்.

ஆனால் ஒருசமூகத்தை கட்டி எழுப்புவதில் பெண்களுக்கே அதிக பங்கு காணப்படுகின்றது. எந்தவொரு தீர்மானத்திலும் அதனுடன் சார்ந்த நடவடிக்கைகளிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது. ஆகவே எங்களுடைய தாயகத்தில் மீளக் குடியேறுவதில் பெண்கள் தான் முன் நிற்க வேண்டும் என்றால் நிச்சயமாக நாங்கள் முன்னிற்போம். ஏனெனில் எங்களுக்கு எங்கள் ஊரில் வாழ்ந்த நிம்மதி சந்தோஷம் இங்கு இல்லை. ஆகவே தற்போதைய அரசு எங்களை எங்கள் ஊரில் உரிய பாதுகாப்புடன் குடியேற்றுவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.


பெண்கள் தங்கள் சொந்த ஊர்களில் குடியேறுவதை உளப்பூர்வமான முறையில் விரும்புகின்றனர். ஏனெனில் அதுவே அவர்களுக்கு வீட்டிலும் சரி பொது இடங்களிலும் சரி நிம்மதியான கௌரவமான வாழ் வையும் வீட்டின் தலைமையையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என நம்புகின்றனர்.

மன்னார் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது புத்தளம், கற் பிட்டி எருக்கலம்பிட்டி குடியேற்றம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் வாழ் கின்ற சில இளைஞர்களி டம் கேட்ட போது,

எமது தாயக மண்ணில் பாரம்பரிய பிரதேசங்களில் வாழவேண்டியது எமக்குரிய பிறப் புரிமை அதையாரும்மறுக்கவோதட்டிக்கழிக்கவோ முடியாது. இவ் உணர்வு அகதி முகாம்களில் வாழ் கின்ற அதிகமான இளைஞர்க ளுக்கு இழையோடி இருக்கிறது என அவ் இளைஞர்கள் தெரி வித் தனர்.

அவர்கள் கூறும் போது தாயகம் திரும்பும் நிலை உடனடியாக சாத்தியமாகுமாஎன்பதுவிடைகாணாத வினாவாகவே இன்று வரை உள்ளது. இடம்பெயர்ந்த காலத்தில் இராணுவக்கட்டுப் பாடற்ற பிரதேசம் இன்று இராணுவக்கட்டுப் பாடுடன் காணப்படுகின்ற போதும் உடனடி யாக மீளக் குடியேற முடியாத காரியமாகவே உள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக அண் மையில் அரசாங்கம் சிலாவத்துறையைக் கைப்பற்றியது. தற்போது ஒரு வருடங்களை யும் தாண்டியுள்ள நிலையிலும் அம் மக்கள் மன்னார் , றசூல் புதுவெளி முகாம்களி லேயே வாழ்கின்றனர் . இவ்வாறு பல பிரச்சி னைகள் காணப்படுவதாக அவர்கள் தெரிவித் தனர். விடுதலைப்புலிகள் மீண்டும் குடியேறு மாறு எமக்கு அழைப்பு விடுக்கவில்லை. இந்நிலையில் குடியமர்வது என் பது பொருத் தமற்றது.

அதேநேரம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக்கொண்டு தற்போது புத்தளம் சோல்டன் முகாமில் வசிக்கும் ஒரு பெற்றோருக்கு பிறந்த எஸ்.எச் .அன்வர் (வயது



16) ஒரு அர புக்கலாசாலையில் கல்வி கற்கும் மாணவன். அவரிடம் மீளக் குடியேறுவதுபற்றிய உங்கள் கருத்து என்ன எனக் கேட்டபோது.

நான் பிறந்தது முதல் இன்று வரை இம் முகாமிலேயே வாழ்கிறேன். எனது ஊர் புத்தளம். நான் புத்தளத்திலேயே வாழ விரும்புகின்றேன். ஏனெனில் எனது பிறப்புரிமை புத்தளத்தையே சார்ந்துள்ளது. எனது பிறப்புரிமையை மேலும் வலுப்படுத்த உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

புத்தளத்தில் வாழ்கின்ற முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த சிலரிடம் மீள் குடியேற்றம் பற்றி தங்களின் அபிப்பிராயம் என்ன ? எனக் கேட்ட போது.

நான் 18 வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்தபோதும் அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு விடிவு வேண்டும். சிதைந்து போன எமது உணர்வுகள் உயிர் பெற வேண்டும்.



பிறரை நம்பி தன்மானம் இழந்து தவித் து நிற்பது போதும். எமது குழந்தைகளாவது இந்த நாட்டில் சுதந்திரப்பிரஜைகளாக வாழ வேண்டும் . இழந்த எமது உரிமைகள் எமக்கு வேண்டும். இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். நிரந்தரமாக சமாதானம் வேண்டும். நிலையான பாதுகாப்பு வேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு இன்னும் முகாம் வாழ்க்கையை தொடரக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. இவை எஞ்சி யுள்ள எமது தாயகத்தின் நினைவுகளை மாற்றாருக்கு தாரை வார்த்து தவிர்த்து நிற்கும் நிலையே தோற்றுவிக்கும் என எமது மக்களின் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர். இங்குள்ள துன்பங்களை சகிக்க முடியாத எம்மைச்சேர்ந்த பல குடும்பங்கள் சமாதான ஒப்பந்த சூழலைப் பயன்படுத்தி முசலியில் குடியேறியும் உள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

**பகுதி A   பரீட்சை X   நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1 6m இன் 7% ஐ cm இல் எழுதுக. ________

2 $11_{இரண்டு} = \square_{பத்து}$ ஆயின் □இல் வரும் எண் ________

3 5 , 8 , 11 , 14 , — , — இல் அடுத்துவரும் இரு உறுப்புக்கள். ________

4 $\square(A)=\frac{4}{5}$ ஆயின் $\square(A')$ எவ்வளவு. ________

5 $\frac{3}{7}+\frac{1}{7}$ ________

6 $y=2x+3$ இல் $x$ இன் குணகம். ________

7 ஒரு அலகு நேரத்தில் சென்ற தூரம் கதி எனப்படும்.
ஒளியின் வேகம் $3\times10^{5} kms^{-1}$ ஆகும்.
ஒளி 1 செக்கனில் செல்லும் தூரம் யாது. ________

8 சுருக்குக. $\frac{x}{3}+\frac{x}{3}$ ________

9 தீர்க்க. $2^{x}=8$ ________

10 AD செங்குத்து BC ஐ குறிப்பீட்டில் தருக மூலம் எழுதுக. ________

### B — Answer

1 6m , 90cm , 7cm , 8mm இன் கூட்டுத் தொகையை m இல் த்ருக. ________m

2 9 ஐ துவித எண்ணாக எழுதுக. ________

3 கூட்டல் விருத்தி ஒன்றின் நான்காவது உறுப்பு 11 உம் பொதுவித்தியாசம் (-3) உம் ஆகும்.முதலாம் உறுப்பை காண்க ________

4 ரவி பாடசாலைக்குச் சமூகமளிப்பதற்கான நிகழ்தகவு $\frac{4}{5}$ ஆயின் சமூகமளிக்காது இருப்பதற்கான நிகழ்தகவு யாது? ________

5 $3\frac{1}{2}\div2\frac{1}{3}$ ________

6 $y+2x+1=0$ என்னும் நேர்கோட்டின் படித்திறனை எழுதுக. ________

7 ஒரு விமானம் 1800 $kmh^{-1}$ எனும் மாறா கதியுடன் பறக்கிறது.
a) விமானம் 1 நிமிடத்தில் சென்ற தூரம் a)________
b) 1 செக்கனில் சென்ற தூரம் யாது? b)________

8 சுருக்குக. $\frac{4x+4}{12}$ ________

9 தீர்க்க. $3^{x}=27$ ________

10 ABC எனும் முக்கோணியில் $\hat{B}=\hat{C}$ ஆயின் சமனான பக்கங்களை எழுதுக. ________

### C — Answer


1 10m தூரம் 4cm நீளமான நேர் கோட்டால் வகைக்குறிக்கப்படுகிறது.
a) 1cm வகைக்குறிக்கும் தூரம் என்ன? a)________
b) இவ்வளவிடையை பின்னமாகவும், விகிதமாகவும் தருக. b)________

2 கூட்டுக. $302_{நான்கு}$
$122_{நான்கு}$
________
$_____{நான்கு}$ ________

3 a முதலுறுப்பாகவும் d பொதுவித்தியாசம் ஆகவும் உள்ள கூட்டல் விருத்தியின் முதல் மூன்று உறுப்புக்களையும் எழுதுக. ________

4 ரவி பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கான நிகழ்தகவு $\frac{4}{5}$ ஆயின் அவன் அடுத்தடுத்து இரு நாட்கள் பாடசாலைக்கு சமூகம் அளிப்பதற்கான நிகழ்தகவு யாது? ________

5 சுருக்குக. $3\frac{3}{8}-5\frac{1}{2}+4\frac{1}{4}$ ________

6 



நேர்கோடு AB இன்
a) படித்திறன் யாது?
b) வெட்டுத்துண்டு யாது?
c) சமன்பாடு யாது?
a)________
b)________
c)________

7 A , B என்னும் இரு புகைவண்டிகள் 280km தூரத்தைக் கடப்பதற்கு முறையே 5 , 4 மணித்தியாலங்கள் எடுத்தன.
a) A யின் கதி யாது? a)________
b) 30 நிமிடங்களில் புகை வண்டி B சென்ற தூரம் யாது? b)________

8 சுருக்குக. $\frac{2}{x}+\frac{1}{2x}-\frac{3}{x}$ ________

9 தீர்க்க. $3^{x-1}=81$ ________

10 படத்தில் தரப்பட்டுள்ள தரவை பயன்படுத்தி




a) x ஐக் காண்க.
b) y ஐக் காண்க.
a)________
b)________

### D — Answer

**1**

2m நீளமான நாடாவிலிருந்து 12.5cm நீளமான எத்தனை துண்டுகள் வெட்டலாம். ________

**2**

கூட்டுக. $1011_{இரண்டு}$
$101_{இரண்டு}$
$11_{இரண்டு}$
________
$\dots\dots\dots_{இரண்டு}$
________

________

**3**

கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் மூன்று உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை 3 உம் முதல் ஐந்து உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை 20 உம் ஆகும். முதலுறுப்பையும் பொதுவித்தியாசத்தையும் எழுதுக. ________

**4**

ரவி பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கான நிகழ்தகவு $\frac{4}{5}$ ஆயின் அவன் அடுத்தடுத்து இரு நாட்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காது இருப்பதற்கான நிகழ்தகவு யாது? ________

**5**


சுருக்குக

$$\left(\frac{1}{3}\div\frac{3}{17}\right)+\frac{5}{28}$$

________

**6**

தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்படாத பிரதேசத்தை வகைகுறிக்கும் சமனிலியை எழுதுக




**7**

புகைவண்டி ஒன்று மாறாக்கதி $vkmh^{-1}$ யில் 120km தூரம் செல்கிறது.
a) 120km தூரம் செல்ல எடுத்த நேரம் யாது?
b)புகைவண்டி தனது கதியை மணிக்கு 10km ஆற்குறைத்து ஓடியிருந்தால் 120km தூரம் செல்ல எடுத்த நேரம் யாது?
a)________
b)________

**8**

சுருக்குக.

$$\frac{x^{2}-2x+1}{5(x-1)}$$


________

**9**

$\ell g2=x$ ஆகவும் $\ell g3=y$ ஆகவும் இருப்பின் $\ell g\left(\frac{4}{27}\right)$ ஐ $x, y$ ஆகியவற்றின் சார்பில் எழுதுக. ________

**10**

தரப்பட்டுள்ள உருவில் குறிக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி




a)x இன் பெறுமானத்தைக் காண்க.
b)y இன் பெறுமானத்தைக் காண்க.
c) STயிற்கு சமனான பக்கம் ஒன்றை எழுதுக.
a)________
b)________
c)________

ஜே.மரியநாயகம்

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

# நோத்முதல் கோபல்லவா வரை 127



### திருத்தப்பட்ட சட்ட சபை

இத் தொகுதிகளை மாகாண அமைப்பில் பின்வருமாறு கணிப்பர்.

1.மேல்மாகாணத் தொகுதிகள் -5
2.தென்மாகாணத் தொகுதிகள் -3
3. வடமாகாணத் தொகுதிகள் -5
4. கீழ்மாகாணத் தொகுதிகள் -2
5.மத்திய மாகாணத் தொகுதிகள் -2
6. வடமேல் மாகாணத் தொகுதிகள் -2
7. வடமத்திய மாகாணத் தொகுதி -1
8. ஊவாமாகாணத் தொகுதி -1
9.சப்பிரகமுவா மாகாணத் தொகுதிகள் -2
மொத்தம் -23

நியமன அங்கத்தவர்கள்
முஸ்லிம் பிரதிநிதிகள் கௌரவ திரு:-
1. மாக்கான் மரக்கார்
2.N.H.M அப்துல் காதர்
3. J.B.யயா
பறங்கியர் பிரதிநிதிகள் கௌரவ திரு:-
1. G.A.H.வில்லே
2. N.J.மாட்டின்
பிறர் பிரதிநிதிகள் கௌரவ திரு;-
1. I.X.பெரேரா
2. S.R.மொகமத் சுல்தான்

திருத்தப்பட்ட சட்டசபையில் இருந்த 49 அங்கத்தவருள் 37 பேர் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராவர். அவர்களுள் 29 அங்கத்தவர் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாவர். இச் சட்டசபையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு முன்னில்லாத செல்வாக்கு அதிகமாக இருந்தது. என்றாலும் அவர்களுக்கு எதிராக உத்தியோக அங்கத்தவர் 12 பேரும் நியமன அங்கத்தவர் எண்மரும் இருந்தார்கள். இலங்கை குடியேற்ற நாடாய் இருந்த போதிலும், ஆள்பதி அவர்களுக்கு வரம்பிகந்த அதிகாரம் இருந்த போதிலும்,அவரை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த இச் சட்ட சபையினர் தடைவலியுள்ளவராயிருந்தனர்.

### மீள் பார்வை

சட்ட நிர்வாகசபை மந்திரிமார் சபையின் போக்குடையதாய் ஆள்பதி தலைமையில் நடைபெறுவது, அதிலே குடியேற்றச் செயலாளர், சட்டத்துறை நாயகம்,மேல் மாகாண அதிபர் ஆகிய மூன்று உத்தியோக்தரும் சட்ட சபையில் உள்ளவரான இரண்டு உத்தியோக அங்கத்தவரும், நான்கு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரும் இருந்தனர்.

இவர்களை ஆள்பதி அவர்களே நிர்வாகசபையில் நியமித் தாலும், அவர் அதனை இராச கட்டளையின் பேரிலேயே செய்தல் வேண்டுமென்பது சட்ட மாயிருந்தது.அதில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் நால்வர் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் சிங்களவர் இருவர், தமிழர் ஒருவர், ஆங்கிலேயர் ஒருவர் என இருந்தனர்.

இக்காலத்திலேதான் வரி நிர்வாகசபை 1925 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. திரு W.W. வுட்ஸ் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் நிலவிய சபையில் திருவாளர்கள் துரைசுவாமி, பாலசிங்கம்,சுப்பிரமணியம் ஆகிய பெரியார்களும் நியமிக்கப்பட்டார்கள். இலங்கை வானொலி நிலையம் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. பொலிசுக்காரருக்குப் பயிற்சிக் கலாசாலையும், கொழும்பிலுள்ள இலவச நூல்நிலையமும் ஆரம்பிக்கப்பட்டன.

புத்தளப் பிரதேசத்தில் புகைவண்டிப் பாதையும், அங்கொடையில் மனநோயாளருக்கு வைத்தியசாலையும், தேயிலை ஆராய்ச்சிச் சாலையும் 1926 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்டன.

சட்டசபையின் கௌரவ அங்கத்தவருக்கு 1927 ஆம் ஆண்டு முதலாகச் செலவுப்படி என்னும் அனுமதி வழங்கப்படலாயிற்று. திருகோணமலைப் பிரதேசப் புகைவண்டிப் பாதை அமைத்தல், இங்கிலாந்தோடு இலங்கை வயர்லெஸ் என்னும் கம்பியில்லாத் தொடர்பு அமைத்தல் என்பன இவ்வாண்டிலே நடைபெற்றன.


மகாத்மாகாந்தியடிகள் வாலிபர் மகாநாட்டினர் அழைப்பையேற்று இலங்கைக்கு வந்து தமது சமூகத் தொண்டுகளுக்கு நிதி திரட்டினார். இலங்கைப் பெண்கள் வாக்குரிமை பெறும் நோக்கமாக மாதர் சங்கம் அமைத்துக் கிளர்ச்சி செய்வாராயினர்.

இலங்கையில் கொலைத்தண்டனை நீக்கப்படல் வேண்டும் என்னும் பிரேரணை சட்டசபையில் 1928 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ அக்பார் அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலை கண்டியில் அமைக்கப்படல் வேண்டுமெனப் பிரேரித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது. உயர் நீதிமன்றத்துத் தீர்ப்பொன்றின் பிரகாரம் சட்ட சபை அங்கத்தவருக்குத் தனிச் சிறப்புரிமை இல்லை என்பது தீர்மானிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்துக்கு ஆறாவது நீதியரசர் நியமனமும் அனுமதிக்கப்படலாயிற்று.


**க.சி.குலரத்தினம்**

ஆள்பதி அவர்களுக்கிருந்த அதிகாரங் காரணமாக அவர் இறக்குமதித் தீர்வை அதிகரித்தல் சம்பந்தமாக உறுதி செய்தமை வரம்பிகந்த முறை எனக் கருதிய உத்தியோகப் பற்றற்றவர் அத்தனை பேரும் 16.7.1929 இல் சபையை விட்டு வெளியேறினார்கள். (தொடரும்)




கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தால் அண்மையில் திக்கம் பகுதியில் 35 இளைஞர்களுக்கு சாரதிப் பயிற்சி வழங்கப்பட்ட நிகழ்வில் இயக்குநர் கி.யோ. ஜெயக்குமார் அடிகளார் சான்றிதழ் வழங்குவதையும், வாழ்வாதார திட்ட முகாமையாளர் என்.தவராஜகுமார் உரையாற்றுவதையும். சாரதி பயிற்சியை பூர்த்தி செய்தவர்களையும் படங்களில் காலணலாம்.

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் பொருளாதார வளர்ச்சியும் 2



இலங்கை 4.7%வளர்ச்சியும் நேபாளம் 2.5% வளர்ச்சியும் கண்டன. இப் பிராந்தியத்தை சுனாமி தாக்குவதற்கு சற்று முன்பான 2003 -04களில் நேபாளத்தினை விட ஏனைய எல்லா நாடுகளும் சராசரியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP- Gross Domestic Production) 5% வளர்ச்சி கண்டன. இந்தியா, மாலைதீவு மற்றும் பாகிஸ்தான் என்பன சிறப்பாக செயலாற்றி சராசரியாக 7% GDPவளர்ச்சியை சாதித்தன. அட்டவணை - 01 சார்க் நாடுகளது கடந்த தசாப்தத்தின் (1990 - 2001) சராசரியான GDP மற்றும் சனத் தொகை வளர்ச்சியைக் காட்டுகின்றது.

**அட்டவணை - 01**

**தேசிய பொருளாதார போக்குகள்**

| பிராந்தியங்கள் | GDPயின் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் (1990-2001) | சனத்தொகையின் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் (1990-2001) |
|---|---|---|
| தெற்காசியா | 5.5 | 1.9 |
| இந்தியா | 5.9 | 1.8 |
| பாகிஸ்தான் | 3.7 | 2.5 |
| பங்களாதேஷ் | 4.9 | 1.8 |
| இலங்கை | 5.1 | 1.3 |
| நேபாளம் | 4.9 | 2.4 |
| மாலைதீவு | - | 2.6 |
| ஆப்கானிஸ்தான் | - | 3.9 |

தெற்காசியா பல்வேறு தடைகளின் மத்தியில் விருத்தியடைந்து வருகின்றமை கவனத்திற் கொள்ளத்தக்க அம்சமாகும். பங்களாதேஷ் உலகின் மிகவும் ஊழல் இடம்பெறும் நாடாக இருந்தும் அதன் GDP வளர்ச்சி வீதமானது 5% வீதமாக உள்ளதுடன், தலா வருமானமானது (Per capita income) வருடாந்தம் 3% அளவில் அதிகரிப்பதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை, நேபாளம் (இங்கு அண்மையில் ஓர் அரசியல் ரீதியான தீர்வு எட்டப்பட்டுள்ளது) ஆகியன கடுமையான உள்நாட்டு யுத்தத்தால் (Civil War)/ முரண்பாடுகளால் பாதிப்படைந்து வருகின்ற போதும் இவற்றின் தலா நுகர்வு வளர்ச்சி வீதங்கள்(Per capita consumption growth rate) முறையே 3%, 4% என காணப்படுகின்றன.

இலங்கையும் இந்தியாவும் பல தசாப்தங்களாகGDP யில் 9% இற்கும் மேலான வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையுடன் செயற்படுகின்றன. மாலைதீவு வெளிநாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர்களுக்கு சுற்றுலா மையங்களை குத்தகைக்கு கொடுத்து (Enclave-type tourism industry) சுற்றுலாத்துறையை விருத்தி செய்துள்ளது. மாலைதீவுப் பொருளாதாரத்தின் அடிப்படைகளாக சுற்றுலா மற்றும் மீன்பிடித்தொழில் ஆகியன காணப்படுகின்றன.

இவற்றின் மூலம் மாலைதீவின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி $ 2,300 எனமும் மடங்காகியுள்ளதுடன் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வருடாந்தம் சராசரியானGDP வளர்ச்சி 9% ஆகவும் காணப்படுகின்றமை முக்கிய அம்சமாகும். பூட்டான் ஒரு விவசாய நாடாக உள்ளதுடன் இந்தியாவின் பிரதான வர்த்தக பங்காளியாகவும் காணப்படுகிறது.

இங்கு இடம் பெறும் நவீன மயமாக்கல் (Modernization) மற்றும் அபிவிருத்தி செயன்முறைகள் நகரமயமாக்கம்(Urbanization) மற்றும் வேலையின்மை போன்ற பிரச்சனைகளை உருவாக்கி இருக்கின்றமை பிரச்சினைக்குரிய விடயமாகும்.

தெற்காசியாவின் அண்மைய பொருளாதார வளர்ச்சி கடந்த இரு தசாப்தங்களில் பிராந்திய அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை சீர்திருத்தங்களின்(Policy reform) விளைவேயாகும். இலங்கை 1980 களில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் கொள்கைகளை தாராளமயமாக்க (Liberalization) ஆரம்பித்தது.

இந்தியாவும் பங்களாதேசும் 1990 களின் ஆரம்பத்திலும் நேபாளமும் பாகிஸ்தானும் 1990 களின் இறுதியிலும் இவ்வாறான தாராளமயமாக்கலை தொடங்கின. இந்தியாவினது தேசிய வருமானம் 1950-1980 களில் 1.5% என்பதிலிருந்து 1991-2006 களில் 4.5%க்கு மூன்று மடங்காக அதிகரித்துள்ளமைக்கு பெருமளவு பங்களித்த காரணி அரசின் கொள்கை சீர்திருத்தங்களேயாகும். நிதித்துறையிலும் /(Financial Sector) இந்தியாவும் இலங்கையும் 1990 களில் தனி யார் வங்கிகளை அனுமதிக்க வட்டி வீதக் கட்டுப்பாடுகளை நீக்க ஆரம்பித்திருந்தன. இச் செயன்முறைகள் பாகிஸ்தானாலும் மிகவும் அண்மையில் பங்களாதேசாலும் தொடரப்பட்டன. சில புறநடைகள் இருந்தும் தெற்காசிய நாடுகள் சிறந்த அரசிறை (Fiscal) மற்றும் நாணயக் கொள்கைகளை (Monetary Policies) பேணியுள்ளமையை ஆசிய அபிவிருத்தி வங்கியினது (ADB) அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

"இந் நாடுகளால் பின்பற்றப்படும் இறுக்கமான பணக்கொள்கை மற்றும் பொது நிதி சம்பந்தமான முன்னேற்றம் 5% அளவில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும். பிராந்தியத்தின் உயர்ந்த வளர்ச்சி வீதம், உயர்ந்த வட்டி வீதம் என்பவற்றால் பாரியளவில் முதலீட்டு உட்பாய்ச்சல்களை கொண்டு வரமுடியம்.

மேலும் விவசாயத்துறை உற்பத்தி திறனில் (Agricultural Productivity) வேகமான முன்னேற்றம், வர்த்தகத்திற்கான சூழல், உட்கட்டுமானம் என்பவற்றின் அபிவிருத்தி ஆகியன உயர்ந்த மட்ட வளர்ச்சியில் தெற்காசியாவை வைத்திருப்பதற்கு திறவுகோலாக அமையும்'' (ADB -2007) என ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றது.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

மேலும் இத் தகைய தெற்காசியாவின் கொள்கை சீர்திருத் தங்களுக்கு வெளியக நிதியளிப்புக்களும் (External Financing) ஒரு நிரப்பீடான பங்கினை (Complementary role) ஆகியிருக்கின்றமை முக்கியமான விடயமாகும். (தொடரும்)



# தரிசனம் 4 ராவய

# சிங்களத்தையும் தமிழையும் தேசிய மொழியாக்க முடியாது

சிங்களம் தேசிய மொழியாக அமுலில் இருக்க வேண்டும் , ஆனால் நிர்வாக நடவடிக்கைகளின் போது தமிழ் மொழிக்கு இடமளிக்கப்படவேண்டும்,சிங்களத்தையும் , தமிழையும் தேசிய மொழியாக அமுல் படுத்த முடியாது.



எஸ்.டபிள்யூ . ஆர்.டி. பண்டார நாயக்கா

1956இல் பண்டார நாயக்க சிங்கள மொழியை அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தியமையானது வரலாற்றுத் தவறை திருத்தியமையாகும். இத் தருணத்தில் ஒரு மொழி என்றால் அது இரண்டு நாடுகளை குறிக்கும். இரண்டு மொழிகள் என்றால் அது ஒரு நாட்டைக் குறிக்கும் இவ்வாறானதொரு நிலைமை எதிர்காலத்தில் உருவாகலாம் என கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

ஆனால் 1972இல் குடியரசு அரசியல் அமைப்பை உருவாக்கிய போது அவர் அக் கருத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார். அதில் சிங்கள மொழி கட்டாயமானதும் தேசிய மொழியாகவும் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

பல மதங்கள், பல்லின கலாசாரங்களின் அடிப்படையில் சிந்திக்கும் நாட்டின் ஐக்கியம் தொடர்பில் கவனம் செலுத்தாதவர்களே தமிழ் மொழியும் அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என வாதிடுகின்றனர்.

வரலாற்றுக்காலம் தொடக்கம் இன்று வரை சிங்கள பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான அநீதிகளை இழைக்கவில்லை.

ஒல்லாந்தர் இலங்கையை ஆக்கிரமித்த போது கத்தோலிக்கர்களால் முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டனர். இதன் போது செனரத் அரசன் தலையிட்டு அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்தார். அம்பாறை மாவட்டத்தில் பெருமளவிலான முஸ்லிம்களை குடியேற்றவும் செயற்பட்டவர் செனரத் அரசர். வரலாற்றுக்காலங்களில் அரசர்களால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை. ஆனால் அண்மைக்காலங்களில் பெரும்பான்மை இனத்தினரால் சிறுபான்மையினர் சிறு சிறு நெருக்கடிகளுக்கு ஆளானதை நாம் மறந்துவிடலாகாது.

ஜனநாயக ரீதியில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த சந்தர்ப்பங்களில் சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டது.

1983 கறுப்பு யூலை தமிழ் மக்கள் தாக்கப்பட்டும் , கொலை செய்யப்பட்டும் துன்புறுத்தப்பட்ட – நேரடியாக இடம்பெற்ற சம்பவங்களாகும். இந்த சம்பவங்கள் தமிழ் மக்களின் எழுச்சியினால் இடம்பெறவில்லை. சிங்களத் தலைவர்களின் தூண்டுதலினாலேயே இடம்பெற்றன.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான சிறில் மத்தியூ போன்றோர் அன்றைய தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைக்கு பொறுப்பேற்றக வேண்டியவர்களாவார்கள்.

இவ்வாறான அநீதிகளை பெரும்


## சிங்களவர் கருத்து

பான்மையான சிங்கள மக்கள் அங்கீகரிக்க வில்லை. மிலேச்சத்தனமான இச் செயற்பாடு முழுமையாக கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த வன்முறைகளில் சிக்கிக்கொண்ட தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு சிங்கள மக்களால் முடியாது போனது என்பது உண்மையாகும். ஆனால் தமது அயலில் வாழ்ந்த தமிழ் மக்களை தமதுவீடுகளில் தங்க வைத்து பாதுகாத்த சிங்கள மக்களும் உள்ளனர்.

# பண்டாவின் அரச கரும மொழி வரலாற்றுத் தவறைத் திருத்தியது

வன்முறைகளின் போது இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ் மக்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை வழங்கியும் சிங்கள மக்கள் உபசரித்தனர். சிங்கள இனவாத தலைவர்களின் தூண்டுதலுக்கு மத்தியில் வன்முறைகளில் ஈடுபட்ட சிறு குழுவினரிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாக்கும் செயற்பாட்டில் சிங்கள மக்கள் ஈடுபட்டனர்.



ஜே.ஆர்.ஜெயவர்த்தன

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் சிங்கள மொழி மூலம் நிர்வாகத்தை மேற்கொள்ள முடியாது எனவே தமது சுய மொழியில் அவர்களது கடமைகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் எந்தவித தவறும் இல்லை. ஆனால் குறிப்பிட்ட ஒருபிரதேசத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும் என்பது பிழையான கருத்தாகும்.

உதாரணமாக கொழும்பில் சிங்களம், தமிழ், முஸ்லிம் மூவினத்தவர்களும் வாழ்கின்றனர். இங்கு நிர்வாகக் கடமைகள் சிங்களத்தில் நடைபெறும் அதேவேளை தேவையான தருணங்களில் தமிழ் மொழியிலும் கடமைகளை மேற்கொள்ளும் சூழலை உருவாக்க வேண்டும். அத்தோடு மேலதிக மொழி ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட வேண்டும்.

நிர்வாகத்தை இலகுவாக்குவதற்கு இச் செயற்பாடு உதவும். நிர்வாகத்தை முன்னெடுப்பதற்காக சிங்கள மொழியை கற்றுக்கொள்வதன் மூலம் தமிழ் மக்க ளின் கலாசாரத்திற்கு, மொழிக்கு, இலக்கியத்திற்கு எதுவிதமான பாதிப்பும் ஏற்படாது. நிர்வாக செயற்பாடுகளை இலகுவாக்குவதோடு செலவையும் குறைப்பதற்கு ஒரு மொழியைப்பயன்படுத்துவது வழி வகுக்கும்.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழி மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் இல்லாமை குறைபாடாகும். விசேடமாக பொலிஸ் நிலையங்களுக்கு ,பிரதேச செயலர் அலுவலகங்களின் கடமைகளுக்கு தமிழ் அதிகாரிகளின் சேவை கட்டாயமானதாகும்.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் இதனை மேற்கொள்வது கடினமான விடயமல்ல. ஆனால் இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்தை வழங்குவது முடியாத காரியமாகும்.

1956இல் சிங்களத்தையும் தமிழையும் பண்டார நாயக்க அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தியிருப்பாரானால் இதனைவிட இரத்த ஆறு ஓடியிருக்கும் சிங்களப் பெரும்பான்மை இனம் இதற்கு ஒரு போதும் இடமளிக்காததே காரணமாகும். இரண்டு மொழிகளையும் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்த வேண்டும் என ஐ.தே.க. கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ,சமசமாஜக்கட்சி தொடர்ந்து வலியுறுத்திவந்தன. இவர்களுக்கு பின்னர் சிங்களம் அரச கரும மொழி என்பதை ஏற்றுக்கொண்டு செயற்பட்டதைக் காண முடிந்தது.

அரச கரும மொழி தொடர்பான விவாதத்தின் போது சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவதன் மூலம் இனங்களின் ஐக்கியத்தை உருவாக்க முடியும் என்றும் எனவே யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்றும் பர்னாட் அலுவிஹரே எம்.பி. தெரிவித்தார். சிங்களம் மற்றும் தமிழ் இரண்டு மொழிகளையும் அரசக ரும மொழியாக ஏற்றுக்கொண்டால் நாட்டில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என ஆர்.எஸ்.என். குணவர்த் தன எம்.பி தெரிவித்தமை எனக்கு ஞாப கம் இருக்கிறது. பண்டார நாயக்க இவ்வாறானதொரு கருத்தையே வெளிப்படுத்தினார்.



பேராசிரியர் மெண்டிஸ் ரோஹணதீர

இனத்தின் அபிலாஷைகள் மற்றும் வெற்றிகள் அனைத்தையும் மொழியே பாதுகாக்கின்றது. நாட்டுப் பிரஜாவுரிமையின் பிரதான அங்கம் மொழியாகும்.


மொழி மூலமே நாட்டின் கலாசாரம் வெளிப்படுத்தப்படுகின்றது. மொழி இல்லாவிட்டால் இனம் அழிந்துபோய்விடும். இனத்தின் விசேடத்துவம் மொழியிலேயே தங்கியுள்ளது என்பது எனது கருத்தாகும்.

1815ஆம் ஆண்டு வரை இந்நாட்டின் நிர்வாகம் சிங்கள மொழியிலேயே நடைபெற்றது. அத்தோடு தமிழ்சுவடிகளும் காணப்பட்டது. அது தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்ததை எடுத்துக்காட்டும் சான்றாகாதா!



கொல்வின் ஆர்.டி.சில்வா

1815இல் முதல் முதலாக ஆங்கிலம் நிர்வாக மொழியானது. அன்று தொடக்கம் சிங்களம் நசுக்கப்பட்டது. அதே நேரம் இனத்தின் மொழியின் சுதந்திரத்திற்கான விடுதலைப்போராட்டங்கள் ஆரம்பமாகின. அவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே எமது இறைமை அழிந்து போகாமல் இருக்கின்றது. சிங்களவர்களின் தொடர் போராட்டங்கள் காரணமாகவே ஆக்கிரமிப்பாளர்கள் எமது நாட்டை விட்டு வெளியேறினார்கள் என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.



# தரிசனம்

# முஸ்லிம்களின் அடையாளம் மொழி அல்ல; மதமே

இலங்கையின் இனப்பிரச்சினை மொழியை அடிப்படையாகக் கொண்டே நோக்கப்படுகிறது. பெரும்பான்மை முஸ்லிம்கள் தமிழ் மொழியையே தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். வடகிழக்குப் பிரதேசங்களில் மட்டுமல்ல சிங்கள மக்கள் மிகவும் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களிலும் முஸ்லிம்கள் மத்தியில் தமிழ் பரவலாக பேசப்படுகிறது.

ஆனால் தமிழ் மொழி பேசுவதால் முஸ்லிம்களை தமிழராக நோக்கும் ஒரு நிலை உருவானபோது முஸ்லிம்கள் அதனை நிராகரித்தனர். தமது அடையாள குறிகாட்டி (Ethic marker) மதமே அன்றி மொழி அல்ல என்பது முஸ்லிம்களின் நிலைப்பாடு.

இதுவும் வேறு பல சமூக அரசியல் காரணிகளும் மொழி மீதான அளவு கடந்த ஈடுபாடு முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட வழிவகுத்தது. அன்மைக் காலமாக ஆங்கிலத்தையும் சிங்களத்தையும் தாய் மொழியாகக்கொண்ட ஒரு போக்கு முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது. ஆய்வின்படி 20 வீதமான முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கின்றனர். பெரு நகர்ப் பிரதேசங்களில் இயங்கிவரும் சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்பதில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவுள்ளது.

## முஸ்லிம்களின் பார்வை

தமது அலுவலக மற்றும் நிர்வாக வேலைகளை தமிழ் மொழி மூலம் செய்து கொள்ள முடியாததால் அம்பாறை மாவட்டத்தில் தனியான கரையோர மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என அப்பிரதேச முஸ்லிம்கள் கோரிக்கை முன்வைத்ததை இவ் விடத்தில் நினைவு படுத்துவது பொருத்த மானது.

## இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி

இலங்கையில் வேறு எந்த சமூகங்களையும் விட முஸ்லிம்கள் மூன்று மொழி அறிவுடையவர்களாக உள்ளனர். (Tri-lingual)இது வெவ்வேறாக பிரிந்து அல்லது தனித்து நிற்கும் சமூகத் தொகுதிகளிடையே தொடர்பாடலை அதிகரிக்க வழிவகுக்கிறது. இதனால் சமூகங்களிடையிலான புரிந்துணர்வும் அதிகரிக்கிறது. இந்த வகையில் தனிப்பட்ட உரையாடல், பொது உரையாடல் ஊடாக மற்ற சமூகங்களைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு முஸ்லிம்களுக்கு அதிகம். மலையகத் தமிழர்களுக்கும் தமிழ் சிங்கள மொழி அறிவு இந்த வகையில சாதகமானதாகவே உள்ளது.

மொழியால் முஸ்லிம்களை ஒரு தனித்த தொகுதியரக அடையாளம் காட்ட முடியாது. முஸ்லிம் சமூகம் மொழி அடிப்படையில் தனக்குள்ளேயே பல்வகைத் தன்மையை (Diversity) கொண்டுள்ளமை மிகவும் சுவாரஷ்யமான விடயமாகும்.

தேசிய இனப்பிரச்சினை வளர்ந்து வந்த நிலையில், மொழி தொடர்பாக ஏற்பட்டு வந்த நிலைப்பாடுகளில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களது அணுகு முறையிலும் தென் இலங்கை முஸ்லிம்களது அணுகுமுறைகளிலும் வேறுபாடுகள் இருந்திருப்பதை மறக்க முடியாது.

இலங்கையில் முஸ்லிம்கள் பல தொகுதிகளாக உள்ளனர். "மலே" மொழியை தாய் மொழியாகக் கொண்ட மலே முஸ்லிம்கள், கச்சி மொழியை பேசும் மேமன்கள், இலங்கையில் கணிசமாக உள்ளனர். உருது, ஆப்கானிய மொழியான புஷ்து என்பவற்றைப் பேசும் சிலரும் இங்கு உள்ளனர். ஆனால், இவர்களுள் அனேகமானோருக்கு தமிழ் பேச முடியும். இலங்கை முஸ்லிம்களை இணைக்கும் மொழியாக (Link Language) தமிழ் உள்ளது.

இலங்கை முஸ்லிம்களுக்கு தமிழ் ஏன் தாய் மொழியாக மாறியது என்பதற்கான காரணம் விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. தென்னிந்திய கடல் வணிக தொடர்பாடலில் தமிழ் பிரதான பாத்திரம் வகித்ததை இதற்கு ஒரு காரணமாக குறிப்பிடுகின்றனர். தமிழிற்கு முற்றிலும் அன்னியமான வேறு மொழியைப் பேசுவோர் கூட தமிழை பேசவும் புரிந்துகொள்ளவும் முடிகின்ற நிலைமை – அதற்கான சமூக அசியல் காரணிகள் ஆராயப் பட வேண்டும். கிரிந்தையில் உள்ள முஸ்லிம்கள் தமக்கிடையே மலே மொழியைத்தான் பேசுகின்றனர். தமிழில் பேசினால் சிறப்பாக தமிழிலே பேசுகின்றனர். மூன்றாம் குறுக்குத் தெரு மேமன்கள் வியாபார நடவடிக்கைகளை தமிழில் மேற்கொள்கின்றனர். அதே அளவுக்கு இவர்கள் சிங்களமும் பேசுகின்றனர்.

இவ்வெல்லாக் காரணிகளும் முஸ்லிம்களுக்கென்று தனித்த ஒரு மொழி இல்லை என்று காட்டுகிறது. மொழி தொடர்பான குறுகிய உணர்ச்சிகரமான நோக்கு முஸ்லிம்களுக்கு இல்லை. இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி எனப் பேசுகின்ற முஸ்லிம்கள் இன்னாட்டில் இருக்கின்றனர். அதே போல சிங்களத்தின் மீது ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட முஸ்லிம்களும் உள்ளனர்.

இலங்கை போன்ற நாட்டில் ஒரே ஒரு மொழி தான் வழக்கில் இருக்க வேண்டும் என்று வாதிப்பது தவறானது. பல மொழிகள் நமது கலாசாரத்தின் பன்மைத் தன்மையை காட்டுகிறது. அது நமது நாட்டின் வளமாகவே பார்க்கப்பட வேண்டும். அவரவருக்கு புரிந்து கொள்ள முடியுமான மொழியில் பேசவும் எழுதவும் அலுவல்களை முடிக்கவும் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அது தான் இந்த நாட்டில் நீண்ட காலமாக பேணப்பட்டு வந்த உள்ளீர்க்கும் (Inclusive) பண்பின் உயர்ந்த வெளிப் பாடாக அமையும்.

ஹிந்துஸ்தான் டைம்ஸின் இலங்கை நிருபர் பி.கே. பாலசந்திரன் குறிப்பிட்ட ஒரு கருத்து இங்கு ஞாபகம் வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்லிம் சமூகம் ஒரு தனித்துவமான புரிதலை ஏற்படுத்தி இருக்கிறது. இதற்குக் காரணம் ஒரு பக்கச் சார்பாக இயங்க முடியாத தன்மையை அவர்களது மொழி 'அவர்களுக்கு வழங்குகிறது. தமது பல்மொழி பரிச்சயம் காரணமாக அவர்களின் புரிந்து கொள்ளலின் அளவு விஸ்தரிக்கிறது.

இப்போது எல்லா சமூகங்களிலும் மற்ற சமூகத்தின் மொழியை அல்லது இன்னொரு மொழியைக் கற்கும் ஆர்வம் அதிகரித்து வருகிறது.



சிறாஜ் மஸ்ஹூர் முஸ்லிம் கலாசார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனப்பணிப்பாளர்

இலங்கை மக்களிடையே புரிந்துணர்வை அதிகரிப்பதற்கான சாதகமான அறிகுறியே இது. இந்தியாவில் உத்தியோக பூர்வ மொழிகள், எழுத்து வடிவம் அற்ற மொழிகள் என்று எண்ணற்ற மொழிகள் உள்ளன.

ஆனாலும், அவர்கள் தம்மிடையே தொடர்பாடலை ஆங்கிலத்தின் ஊடாக மேற்கொள்கின்றனர். இந்தோ ஆரிய மொழிகள், திராவிட மொழிகள் என அவை முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றன. இந்திய மக்களின் கலாசாரம், மொழி மீதான அதீத ஈடுபாடு நமக்கு நன்கு தெரியும். அவர்களே மொழி தொடர்பாக சில விட்டுக் கொடுப்புக்களுக்கு வருகிறார்களென்றால், நாமும் அவ்வாறு விட்டுக் கொடுப்புடன் நடக்க முயன்றால் என்ன?

# வடக்கு முஸ்லிம்கள் மீண்டும்...

*06 ஆம் பக்கத் தொடர்ச்சி*

யுத்தநிறுத்தத்திற்கு பின்னர் முசலிப்பிரதேசத்தில் அதிகமான மக்கள் குடியேறினார்கள். அதனைத்தொடர்ந்து பல்வேறு அபிவிருத்திகளும் அங்கு ஆரம்பிக்கப் பட்டிருந்தன. கிராமம் தோறும் மின்சாரம், பாடசாலைகள், பள்ளிவாசல்கள் என சில அடிப்படை வசதிகளும் உருவாக்கப்பட்டிருந்தன. இருநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் எமது மக்களால் அங்கு கட்டப்பட்டன. குடியிருப்புக்களை மூடியிருந்த காடுகள் அழிக்கப்பட்டு, குளங்களும் புனரமைக்கப்பட்டன. இவற்றை நாம் ஏமது குடியேற்றத்திற்கு சாதகமான சூழ்நிலையாகக் கருதினோம்.

ஆனால், தற்போது அரசாங்கம் மீண்டும் கைப்பற்றி அங்கு குடியேறியவர்களை மீண்டும் அகதிகளாக வெளியேற்றியது. அவர்களை இன்று குடியேற்றுவோம், நாளை குடியேற்றுவோம் என தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றமை வருத்தத்திற்குரியதாகும்.

இந்நிலையில் எமக்குத் தேவை ஒன்றே ஒன்றுதான். புத்தளம் –சிலாவத்துறை வீதியைத் திறந்து முசலிப் பிரதேசத்தில் மீளக் குடியேற்ற அரசு முன்வர வேண்டும்.

உலக வங்கியினால் புத்தளத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வீட்டுத் திட்டம் பற்றி வினவியபோது உலக வங்கியினால் தற்போது அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டம் ஒரு தற்காலிக குடியேற்றமாகவே கருதப்பட வேண்டும். நிரந்தர குடியேற்றமாக அதை எண்ணிவிடக் கூடாது. நிரந்தரக் குடியேற்றம் என்பது அவரவர் சொந்தப் பூமியிலேயே இடம்பெற வேண்டும் என்பது இவர்களின் ஏகோபித்த முடிவாகும்.

ஆனால், தற்போது புத்தளத்தில் அமைக்கப்பட்டு வரும் குடியேற்றம் ஓர் இன்றியமையாத தேவையாகவே கருதப்படவேண்டியிருக்கிறது. ஏனெனில் 1990 இல் இருந்து இது காலவரைக்கும் எவ்வித அடிப்படை வசதி யுமற்ற முகாம்களிலும், சிறுகொட்டகைகளிலும், சிறிய நிலப்பரப்பில் குடும்ப உறுப்பினர்கள் பலர் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். எவ்வித சுகாதார, சமூகநல வசதியுமற்ற அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் அடைபட்டுக் கிடக்கின்ற இம் மக்களுக்கு சகல வசதியுடன் கூடிய ஓர் இருப் பிட வசதியுள்ள மீள்குடியேற்றம் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

வீட்டுத் திட்டம் கிடைத்து விட்டது இனி நாம் ஊருக்குப் போகத் தேவையில்லை என்ற எண்ணம் இன்றைய இளம் சமூதாயத்தினர் மத்தியில் உலவி வருகின்றபோதும் பெரும்பாலான மக்கள் தங்கள் தாயகம் திரும்ப வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர்.

### மீள்குடியேறிய மன்னார் தீவு முஸ்லிம்கள்

அன்று நாங்கள் புத்தளம் அகதி முகாம்களில் வாழ்ந்த போது அனுபவித்த துன்பங்கள் பொறுக்க முடியாமல் ஏதோவொரு உத்வேகத்தில் இங்குவந்து குடியேறினோம். எனினும் நாம் குடியேறிய காலம் முதல் இன்று வரையும் பல பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

நாம் மீளக்குடியேறி 14 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில். நாம் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்கள் என்ற முறையில் எமக்குரிய நியாயமான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. எமது இழந்த சொத்துகளுக்கான நஷ்டஈடு இன்றுவரை வழங்கப்படவில்லை. அழிந்துபோன பொதுக் கட்டடங்கள் புனரமைக்கப்படவில்லை. ஏன் எல்லோருக்கும் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டம் கூட இப்பொழுது தான் எம்மில் சிலருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அன்று பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்த எமது மக்களில் சொற்ப தொகையினரே இன்று இங்கு குடியேறியுள்ளனர். இதனால் எமது கிராம, பிரதேச நலன்களைப் பாதுகாக்க முடியாத நிலையிலுள்ளோம். எமது பாடசாலைகள், பள்ளிவாசல்களைப் பராமரிப்பதற்கு எங்களால் முடியவில்லை. எமது தோட்டங்கள், காணிகள், விளையாட்டு மைதானங்களைப் பாதுகாக்கவும் முடியவில்லை. எமக்கே தெரியாமல் எமது சகோதரர்களால் எம்மைச் சூழ்ந்துள்ள காணிகள், வீடுகள் விற்கப்பட்டு விட்டன. இதனால் புதிதாக உருவாகியுள்ள குடியேற்றங்கள் எமக்கு உடன்பாடாகவில்லை.

அரச உத்தியோர்கங்கள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களில் ... முஸ்லிம்கள் அரிதாகிவிட்டனர். உயர் அதிகாரிகளில் எவருமே எமது இனத்தவரல்ல. பாடசாலைகள், பொது நிலையங்களுக்கான அபிவிருத்தித் திட்டத்தின் போது எமது குறைந்தளவான மக்கள் தொகையைக் காரணம் காட்டி புறக் கணிக்கப்படுகின்றோம்.

எமது வெளியேற்றத்தை சாதகமாகப் பயன்படுத்திய சிலர் எமது பரம்பரை பரம்பரையாக இருந்த தமிழ் – முஸ்லிம் உறவிலும் விரிசலை ஏற்படுத்தி விட்டனர். இவற்றின் விளைவு எமது நியாயமான கோரிக்கைகளும், உரிமைகளும் கூட தட்டிக் கழிக்கப்படுகின்ற நிலையினை அனுபவிக்க இன்னும் வேண்டியுள்ளது.

இன்னும் சில காலம் இதேநிலை தொடருமானால் எஞ்சியுள்ள எமது உடமைகளும் இழக்கப்பட்டு மீண்டும் நிரந்தர நிற்கதி நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

மீண்டும் யுத்தசூழல் தீவிரமடைகிறது. மீன்பிடி, வர்த்தகம், போக்குவரத்து போன்றவை மீண்டும் இக்கட்டான நிலைக்கு மாறியுள்ளன. பல பொருட்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றால் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளது.

இங்கு வாழும் சொற்ப தொகையினராகிய எமக்கு பண வசதியுமில்லை. ஆட்பலமுமில்லை. எமது இன்றைய நிலையினை சுருக்கமாகக் கூறுவதென்றால் தமது தாயக மண்ணிலேயே உடமைகள் இழந்து உரிமைகள் பறிக்கப்பட்டு, ஊனமுற்றவர்களாக காலத்தை நொந்துகொண்டு கண்ணீருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தில் நாங்களும் இடம் பெற்றுள்ளோம்.

பிறர் நலத்துக்காக பாடுபடுவது போல் நடிக்காதீர்கள். உண்மையில் பிறர் நலத்துக்காக பாடுபடுங்கள். அது பிறவிப் பயனைத் தரும்.

— சுவாமி இராமதாசர்

வலம்புரி

## மாணவர்களுக்கு உதவுவதாக நினைத்து உபத்திரம் செய்யக் கூடாது

யாழ்ப்பாணத்தில் தற்போது மாணவர்களை மையமாகக் கொண்ட வருமான உழைப்புப் படலம் எழுச்சி பெற்றுள்ளது.

புலமைப் பரிசில் மாணவர்கள் முதல் க.பொ.த. உயர்தர மாணவர்கள் வரை இந்தப் படலம் வியாபகம் அடைந்துள்ளது.

போட்டிப் பரீட்சைகள், வினாத்தாள் விற்பனைகள் எனப் பல்வகைக் கோணங்களில் மாணவர்களை நோக்கிய வியாபாரம் முடுக்கி விடப்பட்டுள்ளதால் பெற்றோர்பாடு பெரும் திண்டாட்டமாகவுள்ளது.

திருவிழாக் காலக் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் விளையாட்டுப் பொருட்களை சிறுவர்களுக்கு முன்பாக காட்சிப் படுத்த, அவர்கள் பெற்றோர்களை வேண்டித் தரும்படி கேட்க, வியாபாரம் களைகட்டுவது போன்றே, மாணவர்களை மையமாகக் கொண்ட வியாபாரம் நடந்தேறுகின்றதெனலாம்.

மாணவர்களை மையமாகக் கொண்ட பரீட்சை வினாத்தாள்,விடைத்தாள் என்ற வியாபாரத்தில் பிள்ளையின் படிப்பில் சிக்கனமாகாதென்ற நிலையில் பெற்றோரும் தம்பிள்ளைகள் கேட்பதற்கெல்லாம் காசை வாரி இறைக்கின்றனர்.

இவை வசதிபடைத்த –நடுத்தரமான பெற்றோரின் செயலாக அமைய, ஏழைப் பெற்றோர் படிப்பை கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என தம் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுகின்றனர்.

இதில் வேதனை என்னவெனில் சைவசமயப் பரீட்சை வருடத்தில் குறைந்தது இருபது நிறுவங் களால் நடத்தப்படுகின்றது. சமயத்தின் பெயரால் அமைக்கப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் சைவ சமயப் பரீட்சையை நடத்துவதே தமது பணி யென்று நினைத்துச் செயற்படுவதுபோல தோன்றுகின்றது.

சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வத்தில் பிள்ளைகளும் பெற்றோருக்குத் தொந்தரவு கொடுக்க, இருபது, ஐம்பது, நூறு என பணம் விண்ணப்பப்படிவத்துக்காக வழங்கப்படுகிறது.

வருடத்தில் பாடசாலைத் தவணைப் பரீட்சைக்கு மேலாக இருபது பரீட்சைக்கு தோற்றி விசேட, அதிவிசேட சித்திபெற்று மாணவர்கள் சான்றிதழ்களை பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அதேவேளை, ஆலயத்தில் தேவாரம் பாடுவதற்கு ஆட்களைத் தேடும் சோதனை, இறைவன் செய்யும் சோதனையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எத்தனையோ சமயப் பரீட்சைகள் நடத்தியும் தேவாரம் பாடுவதற்கு எந்த மாணவரும் முன்வரவில்லை எனில் பரீட்சை முறையில் மாற்றம் தேவை என்பதே அதன் மதிப்பீடாகும்.

எனவே சமயப் பரீட்சை நடத்தும் அமைப்புகள் பண்ணிசை, தேவார பாராயணம் என்றவாறு தமது பணியை மாற்றவேண்டும்.

மேலாக ஏனைய உழைப்பாளிகளிடமிருந்து தப்புவது பெற்றோரும், மாணவருமே சிந்தித்துச் செயற்படுவதில் தங்கியுள்ளது.

## ஜானக பெரேரா படுகொலை விசாரணைகள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் இரகசியப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அனுராதபுரத்தில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை இது வரையில் அனுராதபுரம் பொலிஸார் முன்னெடுத்து வந்தனர்.

பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.எம்.சமரக்கோன் தலைமையில் இந்த விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்று முதல் இரகசியப் பொலிஸார் மேற்கொள்ள உள்ளதாக அனுராத புரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எம்.சமரக்கோன் நேற்று நீதிமன்றில் தெரி வித் துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம் பெற்ற இந்தக் குண்டுத் தாக்கு தலில் 30 பேர் கொல்லப்பட்டதுடன், 90 பேர் காயம டைந்தி ருந்தனர். இதே வேளை, ஜானக பெரேரா கொலைச்சம்பவம் குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசாங்கத்தின் விசாரணைகளில் எவ்வித நம்பிக்கையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்து பின்னர் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது (இ)

## நிர்க்கதியான நிலையில் தமிழகத்தில் தஞ்சமடையும் இலங்கை அகதிகள்

### புனர்வாழ்வு அமைப்புத் தலைவர் எஸ்.சீ.சந்திரஹாசன்

அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து தமிழக த்திற்கு வரும் அகதிகள் மிகவும் நிர்க்கதியான நிலையில் தஞ்சமடைவதாக ஈழத் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் தலைவர் எஸ். சீ. சந்திரஹாசன் தெரிவித்துள்ளார். 2006 ஆண்டு யுத்தம் ஆரம்பமான காலத்தில் இலங்கையிலிருந்து தமிழகம் நோக்கி அகதிகளாக வந்தவர்களின் நிலைக்கும் தற்போது அகதிகளாக வருவோரின் நிலையும் முற்றிலும் மாறுபட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆரம்ப காலத்தில் வந்த அகதிகள் தங்களது உடமைகளில் ஒரு பகுதியையேனும் தங்களுடன் எடுத்து வந்ததாகவும் தற்போது வருவோர் பட்டினிப் பணியை எதிர்நோக்கிய நிலையில் தமிழகத்தில் தஞ்சம் கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் உக்கிரமடைந்து வரும் காரணத்தினால் இலங்கைத் தமிழர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரபல இந்திய பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். (இ)

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உடனடித்தீர்வு

### பிரதமரை நேரில் சந்தித்து பாலு வற்புறுத்தல்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்திய அரசு அனைத்து முயற்சிகளையும் உடனடியாகமேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை மேலும் சந்தித்து வற்புறுத்தியதாக மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தமிழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அனைத்துக்கட்சிக்கூட்டம் நடந்தது. இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்தித்து 14 நாட்களுக்குள் போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் அப்படி செய்யாவிட்டால் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து எம்பிக்களும் தங்களது பதவியை இராஜினாமா செய்வார்கள் என்று அதிரடியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் தென்கொரியாவில் சுற்றுப்பயணம் செய்த மத்திய கப்பல் மற்றும் சாலைப்போக்குவரத்துத்துறை அமைச்சர் பாலி நேற்று முன்தினம் டில்லி திரும்பினார். நேற்று முன்தினம் மாலை ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள வீட்டில் பிரதமர் மன்மோகன்சிங்கை நேரில் சந்தித்தார். 30 நிமிடம் நடந்த சந்திப்பின் போது வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தேசியபாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் உடன் இருந்தனர்.

அப்போது தமிழக முதல்வர் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எழுதிய கடிதத்தை பிரதமரிடம் பாலு அளித்தார். அக்கடிதத்தில் இலங்கை தமிழர் பிரச்சினைக்காக சென்னையில் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

சந்திப்புக்குப்பிறகு நிருபர்களிடம் பேசிய பாலு இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் மீது நடக்கும் தாக்குதல் பற்றி பிரதமரிடம் விளக்கிக்கூறினேன்.

இத்தாக் குதல்களை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழினப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய அரசு அனைத்து முயற்சிகளையும் உடனடியாக மேற் கொள்ள வேண்டும் என வற்புறுத்தினேன் என்றார்.

பிரதமர் தரப்பில் இருந்து என்ன விளக்கம் அளித்தனர் என்பது கருத்துத்தெரிவிக்க மறுத்துவிட்டார் தமிழகத்தில் அனைத்துக்கட்சிக்கூட்டம் நடந்த பிறகு பிரதமரை மத்திய அமைச்சர் பாலு நேரில் சந்தித்து அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (இ)

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ் 42

இயற்கை மனித வாழ்வுக்குத் தேவையானவற்றைத் தரும் இயல்புடையது. அதனால் நமது முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். மரம் › மலை › கடல் › ஆறு › சுனை என்பவற்றை வணங்கிப் பணிந்து வாழ்ந்தனர். அதனால் மனித வாழ்வுக்குத் தேவையான மழை › வெப்பம் › விளைபொருள் என்பன எதுவித இடை யூறுமின்றிக் கிடைத்தன.

காலப்போக்கில் மனிதன் பிறபண்பாட்டுத்தாக்கங்களினால் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியலிலிருந்து மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக் கொள்ளலானான். இத் தகைய மாற்றம் மனிதனுக்குத் துன்பத்தையும் தந்தது. புல்வேறு மாறுபட்ட இயற்கை நிலைகளுக்கு அவன் முகங் கொடுக்க நேர்ந்தது. அந்தவேளையில் இறைபற்றிய தேடலை மனிதன் மேற்கொண்டான். முன்னோரது நம்பிக்கைகளையும் வாழ்வியல் நடைமுறைகளையும் மீளவும் எண்ணி செயற்படுவதற்கு முனைந்தான். வழிபாட்டினால் இயற்கையின் கொடையைப் பெற முயன்றான்.

இத்தகைய முயற்சியை சுந்தர மூர்த்தி நாயனாருடைய பதிகம் ஒன்றில் காண முடிகிறது. சுந்தரர் திருப்புன்கூருக்கு இறை தரிசனம் செய்வதற்கு சென்றிருந்த போது அங்குள்ள மக்கள் அவரிடம் வந்து தாம் நெடுங்காலம் மழையில்லாமல் வருந்துவதாக விண்ணப்பம் செய்தனர். சுந்தரர் அவர்களிடம் இறைவன் மழையை அருளினால் அதற்கு இறைவனுக்கு என்ன தருவீர்கள் எனக் கேட்டார். மக்கள் "இறைவனுக்கு பன்னிரு வேலி நிலம் தானமாகத் தருவோம்" எனக் கூறினர். சுந்தரரும் அதற்கு ஒப்புக்கொண்டு இறைவனை வேண்டி திருப்பதிகம் பாடினார். மழையும் விடாது பெய்தது தொடர்ந்து மழை பெய்தமையால் மக்கள் சுந்தரரிடம் வந்து மழை நிற்கும் படி பதிகம் பாடினால் இன்னும் பன்னிரு வேலி நிலம் இறைவனுக்கு தானமாக தருவோம் என்று கூறினார். சுந்தரரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி பதிகம் பாட மழை நின்றது.

இந்த நிகழ்ச்சி சுந்தரர் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"இறைவன் நான் விரும்பியதைத் தருவான்" என்ற நம்பிக்கை சுந்தரரிடம் இருந்தது. மக்களுக்காக அவர் இறைவனிடம் வேண்டுகை செய்தார். மக்களும் மனித நிலை யில் ஒருகாரியம் நிறைவேற்ற கையுறை கொடுப்பது போல இறைவனுக்கு நிலத்தைக்கொடுத்தனர். இறைவனை மனித நிலையில் வைத்து எண்ணிச் செயலாற்றும் ஓர் நெருக் கமான பக்தி நிலையை இங்கு உணர முடிகிறது. சுந்தரர் மழை பெய்யவும், நிற்கவும் பாடிய பதிகங்கள் கிடைக்க வில்லை. ஆனால் இந்நிகழ்வை குறிப்பிடும் பாடல் ஒன்று திருப்புன் கூர் திருப்பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல் மழை வளம் வேண்டி நிற்போருக்கு இறைவனிடம் ஆற்றுப்படுத்தி அமைதி தருகிறது.

"வையகமுற்று மாமழை மறந்து வயலினீரிலை மாநிலம் தருதோம்
உய்யக்கொள்க மற்றங் களை யென்னவொளி கொளவெண்
முகிலாய்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளந் தவிர்த்து பெயர்த்தும் பன்னிரு
வேலி கொண்டருளும்
செய்கை கண்டு நின்திருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்
கூருனானே"

# ஆசிரியத்துவத்தின் எழுச்சிக்கு

# வழிகாட்டும் 'ஒப்பிலாமணியே'

ஒரு சமுதாயத்தின் மறு மலர்ச்சிக்கு அடிநாதமாக விளங்குகின்ற ஆசிரியர்கள் சமூகத்தில் முதன்மையானவர்களே. ஒரு பாடசாலை ஆலயமாக உயர்ந்து நிற்பது அங்கு பணி செய்கின்ற நடமாடும் தெய்வங்களாகிய ஆசிரியர்களால் தான்.


திருமதி அ.வேதநாயகம்

கம்பீரமாக ஒலிக்கும் யாழ். வலயக் கல்விப்பணிப் பாளர் திருமதி அ. வேதநாயகத்தின் முகவுரையுடன் "ஒப்பிலாமணியே" குறும்படம் ஆரம்பமாகிறது.

கல்வி அபிவிருத்திக்கான அர சாங்க நிறுவனத்தின் வெளி யீடாக இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் திருமதி அ. வேத நாயகத்தால் தயாரிக்கப்பட்டு கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் க.இ. கமலநாதனால் எழுத்துருவாக்கப்பட்டு இயக்கப் பட்டுள்ள ஒப்பிலாமணியே என்ற குறும்படம் ஆசிரியர் தின வெளியீடாக, ஆசிரியத்துவத்தின் மாண்பினையும் பறை சாற்றுவதாக மலர்ந்துள்ளது.



படத்தின் கதாநாயகன் ஒப்பிலாமணி, ஆசிரியர் ஒருவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதற்கான உதாரண புருஷராகச் சித்தரிக் கப்படுகிறார்.

பூட்டப்பிள்ளையும் கண்ட வயதில், மரணப் படுக்கையில் இருக்கிறார். இவரது உயிரைக் கவர்வதற்காக இயம தர்மராசரும் அவரது கூட்டத்தினரும் மிகுந்த பிரயத்தனப் படுகின்றனர்.

சேவைச் செம்மலின் உயிரை, இயமன் பறித்து விடக்கூடாது என்பதில் சமூகத்தவர் அக்கறைப்படுகிறார்கள். சத்தியவான் உயிர் காக்கச் சாவித்திரி போராடியது போல, மார்க்கண்டேயர் உயிர் காக்கச் சிவனார் முன் வந்தது போல ஒப்பிலாமணியின் உயிரைக் காக்கச் சமூகமே திரண்டு வருகிறது. சேவையால் உயர்ந்தவர்களுக்கு ஒரு பத்து ஆண்டுகள் ஆயுள் நீடிப்பை, வரமாக இயமன் கொடுப்பதோடு படம் இனிதே நிறைவுறுகிறது.

## குறும்பட விமர்சனம்

மையக் கதையின் நகர்ச்சியை தொய்வில்லாது எடுத்துக் காட்டப் பல்வேறு உத்திகளை இயக்குநர் மேற்கொள்கிறார். பின் நோக்கிய பார்வை மூலம் ஒப்பிலாமணியின் கடந்தகால வாழ்வியலைச் சித்தரித்தல், சமூக வழக்காறுகளை விமர்சிப்பதன் மூலம் விழிப் புணர்வை ஏற்படுத்தல் என நன்கு திட்டமிட்டுச் செய்திகள் சொல்லப் படுகின்றன.

ஒப்பிலாமணியின் உயிரின் நிலைத்திருப்பு நிறுவப்படும் போதெல்லாம் மணியோசையைக் காட்டுவது நல்லதோர் உத்தி.

தொழில்நுட்ப உலகில் கணணி கல்வியின் அவசியத்தை வலியுத்துமாற் போல் இயமலோகத்திலும் கணனி மூலம் தரவுத் தளத்தைப் பேணும் காட்சி சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையால் பாதிக்கப்படும் மாணவரின் சோக நிலை, இரத்ததானத்தை வலியுறுத்தி இயமன் செய்யும் பிரசாரம், ஆசிரியர்கள் அணியும் உடைகள் பற்றி மாணவி கொண்டிருக்கும் கணிப்பு என சமகால அனுபவங்களைப் பிரக்ஞை பூர்வமாகப் படம் சுட்டிச் செல்கிறது.

ஆசிரியத்துவப் பாதையில் முட்களும் கற்களும் நிறைந்திருக்கலாம். அவற்றைப் பஞ்சொக்கும் மென்மையுடையதாய் மலரச் செய்வதில் எங்கள் "மனம்" முக்கிய இடம் வகிக்கிறது.

"பூஞ் சோலை" என்ற மிகவும் பின்தங்கிய கிராமத்திற்குப் பணியாற்றச் சென்ற ஒப்பிலாமணியும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்கிறார்.

இந்த உலகம் ஏன் வாழ்கிறது எனக் கூறிய புற நானூற்றுப் புலவன் "தமக்கென முயலா நோன்தான் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" எனக் குறிப்பிட்டான். ஒப்பிலாமணியின் வாழ்வு இத்தகையதாகவே இருந்திருக்கிறது.

படத்தில் ஒப்பிலாமணியாக கலாநிதி த. கலாமணி நடித்துள்ளார். நடித்துள்ளார் என்பதை விட வாழ்ந்துள்ளார் என்பதே பொருத்தம். அத்துடன் இயமதர்மராசாவாகத் தோன்றும் யாழ். தேசிய கல்வியல் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் ஆஜானுபாகுவான தோற்றத்துடன் தனது நடிப்புத் திறனைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஏனைய பாத்திரங்களாகத் தோற்றியோரும் இயல்பாகத் தமது நடிப்புத் திறனை வெளிக்காட்டியுள்ளனர். மா. பிரபாகரன் பேசும் பாணி மிகவும் இரசிக்கத் தக்கதாக இருக்கிறது.

படத்தின் சிறப்புக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஜெயதாசின் ஒளிப்பதிவும் அ. கேதீசின் இசையும் அமைந்திருக்கின்றன. கேதீசன் இசையில் ஒலிக்கும் "எழுந்தது எங்கள் கிராமம்..." பாடலில் துள்ளல் ஓசை இழையோடியிருக்கிறது. அதே போல "தேன்மொழி பேசும் எங்கள் ஆனந்தி ரீச்சர்" பாடலும் ஆசிரியத்து வம் பற்றிய சிந்தனைகளை நயமாக விதைக்கிறது. பாடல்களை எழுதிய மானியூர் ரட்னேஸ், க.இ. கமலநாதன் ஆகியோருக்குஒரு சபாஷ் போடலாம்.க.இ. கமல நாதன் இயக்கம், நடிப்பு, பாடலாக்கம், எனப் பல்வேறு தளங்களில்கால் பதித்துள்ளார்.


க.இ.கமலநாதன்

குறும்படம் என்ற பெயரில் அமைந்திருந்தாலும் 55 நிமிடங்கள் தொய்வின்றிச் செய்திகள் சொல்லப்படுகின்றன. துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் குறிப்பிட்டிருப்பதைப் போல தொலைக் காட்சி ஊடகத்தால் வரும் பாதிப்புக்களைத் தவிர்க்க வேண்டுமாயின் அதே ஊடகத்தையே எமக்குச் சாதகப்படுத்த வேண்டும். அந்த வகையில் இத்தகைய வழி முறை கள் வெற்றி அளிக்க வல்லவை என்பது மனங் கொள்ளத்தக்கது

**ச.லலீசன்**




ஆசிரியர் தினத்திற்கு மதிப்பளித்தல், ஆசிரியத்துவம் தொடர் பான நம்பிக்கையை கட்டி வளர்த்தல் என்பவற்றிற்கு அப்பால் ஊர் கூடி ஒன்று பட்டால் "இயம தர்மனை கூட கூட்டத்தோடு கலைத்துவிட லாம்" என்ற ஒரு பொருண்மையையும் பூடகமாகப் படம் வாதிப்பதை இங்கு சுட்டிக்காட்டல் பொருத்தமானதே.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகத்தின் தயாரிப்பில் க.இ.கமலநாதன் இயக்கத்தில் ஏற்கனவே வெளி வந்த 'வாழும் போதே', 'வெற்றிக்கு வழி' படங்களுடன் ஒப்பிடும் போது 'ஒப்பிலாமணியே' படம் ஒரு பாய்ச்சலாகக் கருதத் தக்க சிறப்புடையது.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 ◆ 05 ◆ 1931



மறைவு 17 ◆ 09 ◆ 2008

**அமரர் நாகமுத்து கணபதிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற பிரதி நில அளவைநாயகம்)

தாயுமாக எமைவளர்த்த தந்தை
ஆசைமுத்தம் அள்ளித்தந்த தாத்தா
பண்பாகப் பரிவு காட்டிய மாமா
வாழ்வுயர வழிகாட்டிய பெரியப்பா
ஐவர் எம்வாழ்வில் முன்னின்ற பெரியண்ணா,
அவனியிலே உங்களைப் போல்
இனி யாருண்டு எமக்கு!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

இன்று வெள்ளிக்கிழமை (17.10.2008) முற்பகல் 9.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் :- யசோதா, கிருபா, ஜெயசீலன்.
மருமக்கள் :- நாகராஜா, ஜனகேஸ்வரன், தர்சிகாதேவி.
பேரப்பிள்ளைகள் :- நிதர்ஷினி, நிதர்ஷன்.

டச்சுவீதி, சாவகச்சேரி.

(1851)


# புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக இலங்கை முன்வைத்த குற்றச்சாட்டுக்கு மறுப்பு

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர் ரொபேர்ட் இவான்ஸ் தெரிவிப்பு

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் லோர்ட் மலொக் பிரவுணைச் சந்தித்து தன்மீது இலங்கை அரசாங்கம் சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு தொடர்பாகவும், அண்மையில் பிரித்தானிய தமிழ் அமைப்பொன்று ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்து கொண்டமை பற்றி முன்வைக்கப்பட்ட தவறான கருத்துக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

எனினும், இந்தக் கருத்தரங்கில் மலொக் பிரவுணும் கலந்துகொண்டிருந்தார். ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர் இவான் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவினால் குற்றம்சாட்டப்பட்டு மறுதினம் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு தயாரித்த அறிக்கை தற்பொழுது ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தயாரிக்கப்பட்டது என இலங்கை அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது.

விடுதலைப்புலிகளால் நடத்தப்படும் அனைத்து பயங்கரவாதத் தாக்குதல்களையும் நான் கண்டித்துள்ளேன். குறிப்பாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நான் அவற்றை கண்டிருந்தேன் என இவான் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தான் ஒருபோதும் நடந்து கொள்ளவில்லை எனத் தெரிவித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவரைச் சந்தித்து இதுபற்றி விளக்கமளிக்க முற்பட்டபோதும் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என கூறியுள்ளார். ஓ


## 28ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



சப்ரகமுவ பல்கலைக்கழக பழைய மாணவனும், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியருமான குகதாஸ் ஜனப்பிரியன் அவர்கள் தனது 28ஆவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாக கொண்டாடும் அதேவேளை நாமும் அவரை அன்போடு வாழ்த்தி நிற்கிறோம்.

பல்கலைக்கழக பழைய
மாணவ நண்பர்கள்
யாழ்ப்பாணம்

(C/1690)

# இந்தியா-அவுஸ்திரேலியா மோதும் 2ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

## நேற்று மொகாலி மழை வெள்ளத்தில்



(மொகாலி)

மொகாலியில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று முன்தினம் புயலுடன் கூடிய கனத்த மழை பெய்தது.

இதையடுத்து மைதானம் முழுவதும் நீர் தேங்கியுள்ளது. எனினும் நேற்று வானிலை யில் நல்ல மாற்றம் இருந்ததால் போட்டி 5 நாட்களும் முழுமையாக நடக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங் கேற்கிறது.

பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் சம நிலையானது. இரண்டாவது டெஸ்ட் இன்று பஞ்சாபிலுள்ள மொகாலியில் நடக்கிறது.

இந்திய ஆடுகளங்களில் மொகாலிவேகப் பந்து வீச்சுக்கு அதிகம் கைகொடுக்கும் என்பதால் அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் கள் உற்சாகத்துடன் பங்கேற்க வந்திருந்த னர்.

ஆனால் இங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து வேகப்பந்து வீச்சு எடு படாது எனத் தெரிகிறது.

மழை நின்றால் மட்டுமே ஆடுகளம் ஓர ளவுக்காவது வேகத்துக்கேற்ற வகையில் மாற்ற முடியும் என ஆடுகளப் பராமரிப்பா ளர்களும் கை விரித்துவிட்டனர்.

இதையடுத்து மொகாலியில் சுழற்பந்து வீச்சாளர்கள் அசத்தும்வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இன்றுமுதல் மழை பெய்யாது என வானிலை ஆராய்ச்சி மையங்கள் தெரிவித்தி ருப்பது வேகங்களுக்கு ஆறுதலான விடயம்.

இதையடுத்து போட்டி ஐந்து நாட்களும் முழுமையாக நடைபெறும் என நம்பலாம். இந்நிலையில் ஆடுகளம் குறித்து பி.சி.சி.ஐ யின் மைதான மற்றும் ஆடுகள குழுவின் தலைவரும், மொகாலி ஆடுகள பராமரிப் பாளருமான தல்ஜித் சிங் அளித்த பேட்டியில் வானிலையில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றத் தால் ஆடுகளம் பராமரிப்பதில் தடங்கல் ஏற் பட்டுள்ளது.

பலத்த காற்றில் மைதானத்தை மூடியி ருந்த தார்பாய்கள் பறந்துவிட்டன. மைதா னம் முழுவதும்நீர்தேங்கியுள்ளது. வீரர்கள் பயிற்சி செய்ய தயாராக வைத்திருந்த ஆடு களங்கள் அனைத்தும் மழையால் பாதிக் கப்பட்டு விட்டது.

ஆனால் இரண்டாவது டெஸ்ட் நடக்கும் ஆடுகளத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல் லை. போட்டிக்கு முன்னதாக எங்களால் முடிந்தவரை கடுமையாக முயற்சி செய்து மைதானத்தை நல்ல நிலைக்கு கொண்டு வருவோம்.

இன்று முதல் நல்ல வெயில் அடிக்கும் என வானிலை ஆய்வு தெரிவிப்பதால் வேகப் பந்துவீச்சாளர்கள் துல்லியமாக பந்து வீசி னால் அசத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**ஸ்ருவெட் கிளார்க் சந்தேகம்**

காயத்தால் அவதிப்பட்டுவரும் அவுஸ்தி ரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ருவெட் கிளார்க் இரண்டாவது டெஸ்ட்டில் பங்கேற்பது சந்தேகம் எனத் தெரிகிறது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

ஸ்ருவெட்டின் முழங்கையில் காயம் ஏற் பட்டுள்ளது. இதனால் அவர் நேற்று முன் தினம் பயிற்சியில் பங்கேற்கவில்லை.

இவர் மொகாலி டெஸ்டில் விளையாடு வாரா? மாட்டாரா? என்பது அணியின் பிசியோ தெரபிஸ்ட் அலெக்ஸ் கவுன்டோரின் பரிசோத னைக்குப் பின்னரே தெரியும் என்றார். (5)

## மக்கள் வங்கியின் மென்பந்து துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 47-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப் படும் விளையாட்டு விழாவினதும் ஒன்று கூடலினதும் ஓர் அங்கமாக நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத் தில் மக்கள் வங்கி கிளைகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நடை பெறவுள்ளது.

இத்துடுப்பாட்ட போட்டிக்கு பிரதம விருந் தினராக பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர் களாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, மக்கள் வங்கியின் ஓய்வு பெற்ற முகாமை யாளர் ஏ.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## யாழ்.கல்வி வலய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று யாழ்.மத்திய கல்லூரி மைதா னத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகள் 4 குழுக்களாகப் பிரிக்கப் பட்டு முதல் சுற்று, அரையிறுதி, இறுதிப் போட்டி என சுற்றுப்போட்டி நடாத்தப்படவுள் ளதாக யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் கே.குமாரசாமி அறி வித்துள்ளார். (5)

## தோனி ஸ்ரைலில் டெண்டுல்கர் சாதனை படைக்க பால் குடிக்கிறார்



(சண்டிகார்)

மொகாலியில் லாராவின் சாதனையை முறியடிக்க சச்சின் தயாராகிவிட்டார். இதற் காக அவர் இந்திய அணியின் ஒருநாள் போட்டி அணித்தலைவர் தோனி ஸ்ரைலில் பால் குடித்து வருகிறார்.

இந்திய வீரர் சச்சின்,டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில் இரண்டாவது இடம் பிடித்துள்ளார்.

முதல் இடத்திலிருக்கும் மேற்கிந்தியத் தீவுகளின் லாராவை முந்த இவருக்கு வெறும் 15 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்படு கிறது.

சமீபத்தில் நடந்த பெங்களூர் டெஸ்டில் இவர் இச்சாதனையை எட்டுவார் என்று எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றமே கிடைத் தது.

இந்நிலையில் மொகாலியில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சச்சின் இருப் பதாக தெரிகிறது.

ஒருநாள் அணித்தலைவர் தோனியைப் பின்பற்றி காலை உணவில் சூடான பாலில் மஞ்சள் கலந்து சாப்பிட்டு வருகிறார். இது குறித்து வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்ட லின் சீனியர் செப் ரமித் கோஹ்லி அளித்த பேட்டியில் சச்சின் அடித்து நொறுக்கவேண் டும் என்ற எண்ணத்துடன் களமிறங்கும் அன்று காலையில் சூடான பால்குடித்துவிட் டுச் செல்வார்.

கடந்த முறையும் இங்கு விளையாட வந்தபோது சூடான பால் கேட்டார். ஒவ்வொரு முறையும் பாலுடன் மஞ்சள் சேர்த்துக் குடிப் பார். இம்முறையும் சூடான பால்குடித்து வருகி றார்.

அவர் வாழைப்பழம் மற்றும் முட்டையை விரும்பிச் சாப்பிட்டார்.

சச்சின் சிறுவயதுத் தோழரும், முன் னாள் இந்திய வீரருமான காம்ப்ளி: சச்சின் கிரிக்கெட்டுக்காக வாழ்கிறார். சாதனை படைக்கவேண்டும் என்பதற்காக வாழ்பவர் இல்லை.

2011 உலகக் கோப்பைப் போட்டியில் நிச்ச யம் பங்கேற்பார். அதன் பின்னர் தான் ஓய்வு பெறுவார் என்றார். (5)

## மூன்றாவது சுற்றில் ஸ்பெயினின் ரபேல் நடால்

(மாட்ரிட்)

ஸ்பெயினில் நடக்கும் மாட்ரிட் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் விளையாட உலகின் நம்பர்-01 வீரர் ரபேல் நடால் தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் லிதுவேனியா வீரர் எர்னஸ்ட்ஸ் குல்பிஸ் உடன் நடால் (ஸ்பெ யின்) நேற்று முன்தினம் மோதினார்.

முதல் செட்டில் இரு வீரர்களும் தங்கள் செட்டில் புள்ளிகளைக் குவித்ததால் ஆட்டம் டைபிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது.

இதில் 7:5 என்ற கணக்கில் வென்ற நடால் முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் அபாரமாக விளையாடிய குல்பிஸ் 6:3 என்ற கணக்கில் வெற்றி பெற சமநிலை ஏற்பட்டது. இதனால் கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது. இதில் சிறப்பாக விளையாடிய நடால் 7:5, 3:6, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (5)

## பெண்கள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய வீராங்கனை முதலிடம்

(மும்பை)

பெண்கள் கிரிக்கெட் உலக தர வரிசைப் பட்டியலில் பந்துவீச்சில் இந்திய அணித் தலை வர் ஜுலான் கோஸ்வாமி முதலிடம் பிடித்துள் ளார்.

பெண்கள் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியல் மும்பையில் நேற்று வெளியிடப்பட்டது. பந்து வீச்சுக்கான தரவரிசையில் இந்திய அணித் தலைவர் ஜுலான் கோஸ்வாமி 741 புள்ளிக ளுடன் முதலிடம் பிடித்துள்ளார்.

துடுப்பாட்ட தரவரிசையில் இங்கிலாந்தின் கிளாரா ரெய்லர் 804 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளார். இந்திய வீராங்க னை மிதாலி ராஜ் 728 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

சகலதுறை வீராங்கனை பட்டியலில் அவுஸ்திரேலியாவின் லிசா தாலோகர்393 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள் ளார்.

பெண்கள் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் ஒரு முயற்சியாக ஐசிசி இந்த தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. (5)

## ரொனால்டோவுக்கு ரூ.900 கோடி

போர்த்துக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் மதிப்பு தங்கத்தை விட பல மடங்கு அதிகரித்து வரு கிறது.

இவரை 900 கோடி ரூபா கொடுத்து ஒப் பந்தம் செய்ய ரியல் மாட்ரிட் அணி தயாராக இருக்கிறது.

உலக அளவில் கால்பந்துவீரர்களுக்கு இருக்கும் ரசிகர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இத னால் இவர்களது ஒப்பந்த தொகையும் ரொக்கெட் வேகத்தில் எகிறி வருகிறது.

அதிலும் தனிநபராக அணிக்கு வெற்றி தேடி தரும் வீரர்கள் என்றால் அதன் மதிப்பே தனிதான். கடந்த 2007இல் உலகின் நம்பர் -01 கால்பந்து வீரராக வலம் வந்த இங் கிலாந்து நட்சத்திரம் டேவிட் பெக்காம், 'லொஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சி' அணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இதற்கான ஒப்பந்தத் தொகை 1600 கோடி ரூபாய் இந்நிலையில் அடுத்த கால் பந்து சூப்பர் ஸ்ராராக வரும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக கருதப்படும் போர்த்துக் கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனல் டோவின் மவுசு பல மடங்கு அதிகரித்துள் ளது. இதையடுத்து இவரது வீட்டில் பண மழை கொட்டி வருகிறது.

இவரை எப்படியாவது தங்கள் அணியில் சேர்த்துவிட வேண்டும் என பல கழகங்களும் போட்டியிட்டு வருகின்றன.

இவர்களில் ரியல் மாட்ரிட் அணி என்ன விலை கொடுத்தேனும் ரொனால்டோவை தம்வசம் இழுக்க போவதாக தெரிவித்துள்ளது.

இதையடுத்து அவர் 900 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்படுவார் என எதிர்பார்க் கப்படுகிறது. இதன் மூலம் தங்கத்தின் விலை யை விட ரொனால்டோ மதிப்பு 55 மடங்கு அதிகம் என புள்ளியியல் நிபுணர்கள் தெரி வித்துள்ளனர். (5)



கிறிஸ்டியானோ ரொனால்டோ

# புகைப்படக் கண்காட்சி நாளையும் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும் யாழ்ப்பாண கிராமிய பண்பாட்டு இலக்கியம் சார்ந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சி நாளையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி கடந்த 15ஆம் திகதி தொடக்கம் இன்றுவரை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடபகுதி தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சகல சிக்கல்களுக்கும் தீர்வு காணப்பட்டு விரைவில் நியமனம் வழங்கப்படும் என வடமாகாண விசேட செயலணித் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நேற்று அவரைச் சந்தித்த நூற்றுக்கு மேற்பட்ட தொண்டராசிரியர்களுடன் உரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி அன்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தையில் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்திற்கு 479 நியமனங்களும் வட மாகாணத்திற்கு 530 நியமனங்களும் வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்வோர் தொடர்பில் 527 நியமனங்களுமாக தொண்டராசிரியர் நியமனம் நிச்சயம் வழங்கப்படும் என்றும் அதுகுறித்து எதுவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் மூலமாக ஒரு தொகுதி ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ள அதேவேளை ஏனையவர்களுக்கும் நியமனம் வழங்கக் கூடிய வகையில் மற்றுமொரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொண்டராசிரியர்கள் மத்தியில் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான தொண்டராசிரியர்களின் இச் சந்திப்பின்போது வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவனும் சமுகமளித்திருந்தார். (ச-5)

## வன்னி சென்ற 50 லொறிகள்...

பாட்டிலுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான ஐ.நாவின் நிவாரண உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற 50 லொறிகளே இவ்வாறு திரும்பி வந்துள்ளன.

இந்த லொறிகள் சுமார் 650 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாகத் தகவல் அளித்த ஐ.நாவின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வையிஸ்,

இராணுவத்தால் பணிக்கப்பட்டபடி புதிய விநியோகப் பாதையூடாக ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்கள் அடங்கிய 2-வது வாகனத் தொடரணி நேற்றுப் பகல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் சென்றது.

எனினும் ஏ-9 வீதிப் பகுதியில் நேற்றுப் பகல் கடுமையான மோதல் இடம்பெற்றது. இதனால் உணவுப் பொருள்களுடன் சென்ற லொறிகள் தொடர்ந்தும் பயணிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனையடுத்து வாகனங்கள், பணியாளர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு லொறிகள் மீண்டும் வவுனியாவுக்குத் திரும்புவது என முடிபு செய்யப்பட்டது. இதன்படி 50லொறிகளும் வவுனியாவுக்குப் பாதுகாப்பாக வந்துள்ளன. இதேவேளை இச்சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார,

ஐ.நாவின் உணவுப் பொருள் வாகனத் தொடரணி சென்ற ஒட்டிசுட்டான் பகுதியில் விடுதலைப்புலிகள் கடும் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டதாகவும் இதனையடுத்துத் தொடர்ந்து பயணிக்க முடியாமல் உணவுப் பொருள்கள் அடங்கிய லொறிகள் வவுனியா திரும்ப நேரிட்டதாகவும் கூறியுள்ளார். (ச-3,5)

# விவசாய நடவடிக்கைக்குச் சென்ற நான்கு விவசாயிகள் சுட்டுக்கொலை

அம்பாறை திருக்கோவில் பகுதியில் விவசாய நடவடிக்கைகளுக்காகச் சென்று கொண்டிருந்த விவசாயிகளான 2 முஸ்லிம்களும் 2 தமிழர்களும் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பகுதியிலுள்ள வட்டமடுப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வட்டமடுப் பகுதியில் விவசாயம் செய்வதற்கு 2 முஸ்லிம்களும் 2 தமிழர்களும் சிறப்பு அதிரடிப் படையினரின் முகாமில் பதிவு செய்துவிட்டு அப் பகுதிக்குச் சென்றனர்.

அவர்கள் அங்கு சென்று கொண்டிருந்தபோது அப் பகுதியில் முன்னரே பதுங்கியிருந்த சிலர் நால்வரையும் சுட்டுக் கொலை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விசேட அதிரடிப் படையினரே விவசாயிகளைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவித்து அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்று முழுவதும் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து முழுமையான கதவடைப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்து யாவும் முற்றாகத் தடைப்பட்டுள்ளதாகவும் அப் பகுதி முழுவதும் கறுப்பு-வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## இலங்கை நிலவரம் தொடர்...

தீர்வே காணப்படவேண்டும். இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இந்திய அரசு இதை உறுதி செய்ய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பரபரப்பான சூழ்நிலையில் 14-வது நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடர்இன்று கூடுகின்றது.

இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்த விவகாரம், பயங்கரவாதத் தாக்குதல்கள், ஒரிசா மற்றும் கர்நாடகாவில் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள், விலைவாசி உயர்வு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக நாடாளுமன்றத்தில் புயல் கிளம்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே தமிழகக் கட்சிகள் இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படும் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பும் என்றும் தெரிகின்றது. ஏற்கனவே இந்தப் பிரச்சினையில் 15 நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக எம்.பிக்கள் கூண்டோடு இராஜினாமா செய்யப் போவதாக முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரபரப்புகளுக்கிடையே நவம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடங்கி டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை டில்லி, இராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளன. இதன் காரணமாக இன்று தொடங்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பெரும் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## விடுதலைப்புலிகளுக்கு எதிரான...

நியாயமான கவலை குறித்து இலங்கை ஏற்கனவே கவனம் செலுத்தியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பயங்கரவாதிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றே முன்வைக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தார்.

இலங்கையின் வட பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் நடைபெற்று வரும் மோதல்களில் பாரியளவில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்பட வில்லை என அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப்புலிகள் கூட மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்துக் கதைப்பதில்லை என அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார். (ச-5)

## ஈழத் தமிழர்களுக்கு ஆதர...

விட்டால் தமிழக எம்.பிக்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்வார்கள் என முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நமது தமிழ் இன மக்கள் இலங்கையில் படும் தொல்லைகள், கொடிய துன்பங்களில் இருந்து விடுபட்டு-இனப்படுகொலை நிறுத்தப்பட்டு, நிலையான அமைதி காண்பதற்கு தமிழக அரசின் சார்பில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் ஆறு தீர்மானங்களையும் நினைவூட்டி வலியுறுத்திட, அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 3 மணி முதல் சென்னையில் மாபெரும் மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடைபெறும்.

அந்த அணி வகுப்பில் சென்னையிலே உள்ளவர்கள் மாத்திரமல்லாமல் பிற மாவட்டங்களில் உள்ளவர்களும் கலந்து கொள்ளக் கூடிய பிரமாண்டப் பேரணியாக அமையும் என்பதால் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்து கலந்து கொண்டு மனிதச் சங்கிலியை பெருமளவில் நடத்திட அனைத்துக் கட்சியினரும் குறிப்பாக மகளிர், மாணவர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள், விவசாயிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று கூறியுள்ளார். (ச-5)

## உணவுக்கோ மருந்து வகை...

முயற்சிக்கின்றன.

அதனால்தான் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்க சில ஊடகங்களை அவை பயன்படுத்துகின்றன. வன்னி அரிசி அதிகம் விளையும் பிரதேசமாகும். அங்கு நாம் 5 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியைக் கையிருப்பில் வைத்திருக்கின்றோம்.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி பாரிய உணவுச் சேமிப்பு குதம் ஒன்றையும் நாம் நிர்வகித்து வருகின்றோம். எமது இந்த நடவடிக்கையைக் கண்டு ஐ.நா. அதிகாரிகளே திகைத்துப் போயுள்ளனர்.

யுத்தத்திற்கும் பொதுமக்களுக்கான உணவு விநியோகத்திற்கும் சம்பந்தமில்லை. வன்னி மக்கள் எமது நாட்டின் பிரஜைகள். அவர்களின் நலனில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுகின்றது.

வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்காக உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நேற்று அரசாங்கம் 50 லொறிகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

அடுத்த வாரம் 100 லொறிகளில் உணவை அனுப்ப அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. போதிய பாதுகாப்பில்லை என்று காரணம் கூறி அரச சார்பற்ற அமைப்புக்கள் வன்னி மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்ள மறுத்தபோது எமது அரசாங்கம் அந்த அரச சார்பற்ற அமைப்புகளின் கால்களில் விழவில்லை.

மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தித் தேவையான பகுதிகளுக்கு உணவு விநியோகம் மேற்கொண்டது. ஏ-9 பாதையை அரசாங்கம் மூடியபோது யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாக ஊடகங்கள் பொய்யான தகவல்களை உலகுக்கு வழங்கின.

ஆனால் அரசாங்கம் கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு உணவு விநியோகம் மேற்கொண்டது. அதேபோன்றுதான் இன்று கிளிநொச்சியைப் படையினர் நெருங்கியுள்ள வேளையில் அங்குள்ள மக்கள் உணவின்றி வாடுவதாகப் புலி சார்பு ஊடகங்கள் உலகுக்குக் காட்ட முயலுகின்றன.

பாலங்களைத் தகர்த்து இடம்பெயர்ந்தவர்களுக்கான அரசின் உணவு விநியோகத்தைச் சீர்குலைப்பதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் புலிகள் முயற்சிக்கின்றனர்.

எனினும் வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவு விநியோகத்தைத் திட்டமிட்ட அடிப்படையில் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (ச-5)

## முகமாலையில் ஐந்து மணி நேரம்...

முகமாலைத் தாக்குதல் தொடர்பில் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

வடபோர் முனையான யாழ்.முகமாலையில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 15 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 40 பேர் காயமடைந்துள்ளனர்.

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் படையினர் செறிவான எறிகணை, பல்குழல் வெடிகணை மற்றும் டாங்கி சூட்டாதரவுகளுடன் பெருமெடுப்பில் முன்னகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன்னகர்வுக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல் முற்பகல் 11.30 மணி வரை நீடித்தது. இதில் 15 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 40 படையினர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் மீது தொடுத்த தாக்குதல் ஒன்றில் புலிகளின் இரண்டு தலைவர்கள் கொல்லப்பட்டு விடுதலைப்புலிகளுக்குப் பெரும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டதாக இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள இணையச் செய்திக் குறிப்பு கூறுகின்றது.

படைத் தரப்பில் 3 பேர் கொல்லப்பட்டதாகவும் 9 பேர் காயமடைந்ததாகவும் அது கூறியுள்ளது.

### குடாநாடு அதிர்ந்தது

முகமாலையில் இடம்பெற்ற மோதலையடுத்து யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து முகமாலை முன்னரங்கப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதால் யாழ்.குடாநாடு சில மணி நேரம் அதிர்ந்தது.

நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து யாழ்.நகரப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் முகமாலையை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

தென்மராட்சி மற்றும் தீவகப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு முதல் கடும் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தியதாகவும் தெரியவருகின்றது. எறிகணைத் தாக்குதல்களால் தென்மராட்சிப் பகுதியில் இரவு முதல் கடும் மோதல் சத்தங்கள் கேட்டதாகப் பிராந்தியத் தகவல்கள் கூறுகின்றன.

விடுதலைப்புலிகள் ஏவிய எறிகணைகள் மண்டைதீவுப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரியவருகின்றது. இதேவேளை யாழ்.-பலாலி வீதி மற்றும் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பலாலிக்கான வீதிகள் என்பன மூடப்பட்டு இராணுவத் தொடரணிகள் சென்றதாகவும்,

முகமாலை முன்னரங்கப் பகுதியிலிருந்து அம்புலனஸ் வண்டிகள் சென்றதைக் காணக் கூடியதாக இருந்ததாகவும் பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## திருநெல்...

கொல்லப்பட்டவர் ஆவார்.

இவரது சடலம் கோப்பாய்ப் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-3.49)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.